உ

# தமிழ்ப் பொழில்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத் திங்கள் வெளியீடு.

துணர்: க. குரோதன-ஆவணி. மலர்: ரு.

உ

## பேராசிரியர் உரைக்குறிப்பு.

சென்ற திங்களிதழில் இவ்வுரையேட்டின் இயலினையும், இதனைச் சங்கம் அச்சிட்டதோர் செயலினையும், ஏனையுரைகளொடு இதன்பாற் காணலாகும் பெரும் வேறுபாட்டினையும், இதன் நடைநயமாங் கூறுபாட்டினையும் சிறிது சிறிது காட்டிப் போந்தாம். அதன் தொடர்பாக ஈங்குஞ் சிறிது காட்டுகின்றாம்.

இவ்வுரையாசிரியர் தாம் கூறப்புகும் பொருளினைச் சிறார்க்குக் கூறுவது போல மிக எளிதாக எடுத்துக்கூறும் நலம் மிளிர்வது ஆங்காங்குக் காணலாகும். எடுத்துக்காட்டாக ஒன்று காட்டுமுன் அதன் இடம் விளங்க இடையிற் சில சேர்க்கின்றாம்.

**வேற்றுமைத்தொகை** முதலிய தொகைகள்-இரண்டும் பலவும் ஆய சொற்கள் இடையில் அவ்வவ்வுருபுகள் தொக்கு நிற்க வரப் பெறுவனவாம் என்பது ஒருசார்உரையாசிரியர் கொள்கை. எனவே, இவர்தம் கருத்து அத்தொகைகள் ஒன்றின்மேலாய சொற்கள் விட்டிசைத்து நிற்பன ; ஒரு சொல்லல்ல என்பதாயிற்று. இனி, மற்றொருசாரார் வேற்றுமை முதலிய பொருள்களில் இரண்டும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஒற்றுமைப்பட்டுத் தம்முள் இயைந்து ஒருசொல் நீர்மைத்தாகி வருவனவே

வேற்றுமைத் தொகை முதலியனவாம் என்பர். எனவே, இவர் தம் கருத்து இத்தொகைகள் இரண்டு சொல்லாக விட்டிசைப் பனவல்ல; ஒரு சொன்னீர்மைய என்பதாயிற்று. இவ்விருசார் உரையாளருள், நம் பேராசிரியர் பிற்கூறிய கொள்கையினராவர். அது பற்றி அவர்தம் உரை செல்லுமாறு:—

"தொகைச் சொல்லாவது பொருளுணர்த்துஞ் சொல்லாயி னும், தொழிலுணர்த்துஞ் சொல்லாயினும் இரண்டுசொல் விட் டிசைத்து நில்லாது ஒட்டி நிற்பது. இஃது ஒட்டுப் பெயர் என் னுங் குறியும் பெறும்."

"வேற்றுமையியல" என்றதனுள் வேற்றுமைகட்கு ஓதிய செயப்படு பொருள் முதலாக இடம் ஈறாக வரும் பொருண்மைக் கண் தொகுஞ்சொல் வேற்றுமைத் தொகையாம் என்றுகொள்க. முதல் வேற்றுமை பெயர்ப் பயனிலை கொள்வழியும் விட்டிசைத் தே நிற்றலானும், எட்டாவது விரிந்து நிற்றலானும் இவை யிற்றை யொழித்து ஏனைய தொகுமென்று கொள்க."

"அவை தொகுமாறு:— படையைப் பிடித்தகை............ தாயொடுகூட மூவர், கடிசூத்திரத்திற்கு வைத்தபொன், வரை யினின்றும் வீழாநின்ற அருவி, யானையது கோடு, குன்றத்துக் கண் வாழாநின்ற கூகை என்பன—படைக்கை, ..................... ......குன்றக் கூகை எனத் தொகும். நிலத்தைக் கடந்தான், ..............................குன்றத்துக்கண் இருந்தான் என்றவழி, இறுதி நின்ற (தொழிற் சொல்) தொழிலுணர்த்தாது, அது செய்தார்க்கும் பெயராகி வந்துழி, நிலங்கடந்தான்,............... ....... .........குன்றத்திருந்தான் என இரண்டு பெயரும் ஒட்டி ஒரு சொல்லாகிவரும்..........."

அஃதேல், இவ்வாறு வருவன உருபுதொகையென அடங் காவோ வெனின், ஆண்டு அவ்வேற்றுமைகட்கு ஓதிய வாய் பாட்டால் தொழிலோடும் பெயரோடும் முடிவுழி, உருபு மாத் திரம் தொக்கு இரண்டு சொல்லாகி நிற்கும்; ஈண்டு ஒரு சொல் லாகிவரும்."

இனி, எடுத்துக் காட்டப் புக்கது வருமாறு:—

"அஃது அற்றாக; உலக முவப்ப..............வாணுதல் கணவன் என்பது பல சொல்லாகி வந்து கணவன் என்பதனோடு முடிந்து கிடத்தலான், இரண்டு சொல் ஒரு தொகையாம் என்றல் பொருந்தாதால் எனின், எவ்வாறு வரினும் இரண்டு சொல்லாகி வந்தல்லது ஒட்டுப்படாதென்று கொள்க. அஃதாயவாறு என்னையெனின், பூத்தொடை போலக்கொள்க. அஃது இரண்டாயவாறு என்னையெனின், முற்பட இரண்டு பூவை எடுத்து ஒன்றாகக் கட்டும். அதன்பின் அவ்விரண்டும் ஒன்றாகி நின்ற தொடையோடே கூடப் பின்னும் ஒரு பூவையெடுத்துக் கட்டும். அதன்பின் அம்மூன்று பூவும் ஒன்றாகக் கட்டப்பட்ட தொடையொடே பின்னும் ஒரு பூவை எடுத்துக் கட்டும். அவ்வாறு கட்டப்பட்ட தொடைகளைப் பின்னும் இரண்டொன்றாக் கோத்து ஒன்றாக்கும். இவ்வாறே எல்லாப் பூவும் இரண்டொன்றாக இணைத்ததாம். சொற்றொடையும் ஒட்டுப் படுங்கால் அவ்வாறு வருமென்று கொள்க.

உலகமென்பது உலகத்துள்ளார்க்குப் பெயராகி உவப்ப என்னும் செயவென்னெச்சத்தோடு முடிந்தது. வலனுக என்னும் எச்சத்துக்கண் ஆகவென்பது செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது. தொக்குநின்ற காலத்தும் அதற்கு இயல்பு முற்பட்ட நிலைமை யென்றுகொள்க. என்போலவெனின், வாளுஞ்செவியும் இழந்த ஞமலியைப் பின்னும் ஞமலியென்றே வழங்கினாற்போல. உவப்ப வலனுக என்னும் செயவென்னெச்சமும், ஏற்பு என நிகழ்காலங் குறித்த செயவென்னெச்சமும் திரிதரு வென்னும் பெயரெச்சத்தோடு முடிந்தன. பலர்ாலென்னும் மூன்றும் வேற்றுமைப் பெயர் உருபு தொக வருதல் என்னும் இலக்கணத்தால் தொக்குப் பலரெனநின்றது. அது புகழப்பட்ட என்பதற்கு அடையாகி நின்றது. அடையெனினும் விசேடணம் எனினும் ஒக்கும். புகழப்பட்ட வென்னும் பெயரெச்சம், உண்சோறென்றாற்போலப் பொருண்மேல் வந்து வினைத்தொகையாகிப், புகழ்ஞாயிறென ஒட்டி ஒரு சொல்லாகி நின்றது. ஞாயிற்றை யென்னும் உருபு தொக்கு நின்றது.

கடலின்கண்ணென்னும் உருபு தொக்கு நின்றது. கண்டாங்கு என்பது கண்டாற்போலும் என்னும் உவமப் பொருள்உளர நின்றது. இத்துணையும் உணர்த்தப்பட்டது—உதய ஞாயிறு போல என்னும் பொருண்மை. ஓவற என்பது-ஓவு ஒழிவு, அற என்பது இல்லையாக என்னுஞ் செயவெனச்ச வாய்பாடு. அதற்கு ஓவு என்பது அடையாகி நின்றது. அறவென்பது இமைக்கும் என்னும் பெயரெச்சத்தோடு முடிந்தது. சேணின்கண் என்பது சேண் என உருபு தொக்கு நின்றது. அது விளங்கும் என்பதற்கு அடையாகிநின்றது. அவிர் என்பது விளக்கத்தின் மிகுதியைக் குறித்து வந்து ஒளியென்னும் பெயரோடு வினைத் தொகையாகி, அவிரொளியென ஒரு சொல்லாயிற்று. அது விளங்கு என்பதனொடு ஒட்டி வினைத்தொகையாகி, விளங்கவி ரொளி யென ஒரு சொல்நீர்மைப்பட்டது. அஃது இமைக்கும் என்னும் பெயரெச்சத்திற்கு முடிபாயிற்று. உலகம் என்பது முதலாக இத்துணையுங் கூறப்பட்டது ஞாயிறுபோல் விளங்கும் ஒளியென ஒளிக்கு அடை கூறுதலான், அவ்வொளியோடே எல்லாச் சொல்லும் முற்றி நின்றன. உறுநரை யென்பது உறு நர் என உருபு தொக்கு நின்றது. தாங்கிய என்பது பெயரெச் சம். அதற்கு உறுநர் என்பது அடையாகி நின்றது. மதன் என்பது வலி. அது மச என்னும் உரிச்சொல் ஈறுதிரிந்து நின் றது. மதனை என்னும் ஐகாரம் தொக்கு நின்றது. நோன்மை பொறை. திருவடியடைவார் பலராதலின், அவரெல்லாரையும் பொறுக்க வல்லதாளென்னும் பொருண்மைத்தாகி, நோன்று ளென வேற்றுமைத்தொகையாகி ஒரு சொன்னீர்மைப்பட்டது. அது மதனுடை நோன்றாள் என அடையடுத்து உறுநர்த்தாங் கிய என்னும் பெயரெச்சத்திற்கு முடிபாயிற்று. செறுநரை என்பது செறுநர் என உருபு தொக்கு நின்றது. தேய்த்த என் பது பெயரெச்சம். அதற்குச் செறுநர் என்பது அடையாகி நின்றது. செல் என்பது மழை. உறழ்தல் என்பது ஒத்தல். அது தடக்கை என்பதற்கு உவம நிலையின் அடையாகி நின்று, செல்லுறழ் தடக்கையென்று ஒரு சொன்னீர்மைப்பட்டது. அது தேய்த்த என்னும் பெயரெச்சத்திற்கு முடிபாயிற்று. மறு என்பது குற்றம். இல் என்பது இல்லாமை. குற்றமில் கற்

பெனக் கற்பிற்கு அடையாயிற்று. வாள் என்பது ஒளி. அது ஒளிறுதல் என அடையடுத்து நின்றது. **சினையிற்கூறு முதலறி கிளவி** யாகி அதனை யுடையாட்குப் பெயராகி நின்றது. அது மறுவில் கற்பின் வாணுதல் எனப் பண்புத் தொகையாகி ஒரு சொன்னடையாயிற்று. அது கணவன் என்னும் பெயரோடு கிழமைப் பொருட்டாகிய ஆறும் வேற்றுமைத் தொகையாகிய மறுவில் கற்பின் வாணுதல் கணவன் என இரண்டாம் வேற்றுமைத் தொகையாகிய ஒரு பெயராயிற்று. அது செல்லுறழ் தடக்கைக் கணவனென இரண்டாம் வேற்றுமைத் தொகையாகி ஒரு சொன்னீர்மைப்பட்டது. அது மதனுடை நோன்றாள் என்பதனோடும் அவ்வாறேஒட்டி நோன்றாட்டடக்கைக் கணவன் என ஒருசொன்னடை யாயிற்று. அது சேண்விளங்கவிரொளி என்பதனோடும் அவ்வாறே யொட்டிச் சேண்விளங் கவிரொளி நோன்றாட்டடக்கைக் கணவன் என ஒருசொன்னடையாயிற்று. இவ்வாறு சொன்னிலைமை யுணர்க. இரண்டு சொல்லே தொகையாகியவாறு கண்டுகொள்க. **எல்லாத் தோகையும் ஒரு சொன் . னடைய** என்றோதின்மையானும் ஆசிரியன் கருத்திதுவென்று கொள்க.''

உரையாசிரியர் சிலர் தாம் உரைக்கும் நூலில் தமக்கு ஐயப்பாடாதல், அறியாமையாதல் காட்டியெழுதல் அருமையினும் அருமையாகும். அங்ஙனம் எழுதுவாரிலரேனும் அவர் தாம் வலிந்து பொருள்கூறும் இடங்களில் அவர்தம் ஐயப்பாடோ, விளங்காமையோ படிப்பார்க்குப் புலனாகாதிராது. நெடுங்காலத்தின் பின்னர் உரைவகுக்கப்புக்க உரையாசிரியர், இடைப்பட்ட காலநெடுமையால் மறைக்கப்பட்ட பொருளினை உணரலாகாமையின், முதனூலாசிரியர்களின் கருத்தினை ஒரோவழி அறியாமை பற்றி அவர்கட்கு வரக்கடவதோர் இழுக்கென்னை? ஒரு கோட்பாட்டினை மனத்தில் நிறீஇ, அதற்கேற்ப உரை உரைத்துச்செல்லுங்காற் றோன்றும் வலிந்த உரைகளும், ஒரு நூற்பா, இயல் முதலியவற்றோடு பின்னிற்பனவற்றிற்கு உரைக்கப்புகும் இயைபுரைகளுள் ஒரோவழிக்காணும் மெலிந்த வுரைகளும், வேண்டா வினாக்களைத் தாமே யெழுப்பி விடையிறுக்கப்புக்கு இடர்ப்படும் இடங்களிற்காணும் பொருந்தாவுரைகளும்,இன்னோரன்ன வேறு

பிற திருந்தாவுரைகளும் எப்புலத்தோரும் போற்றும் செப்பமுடைய சீரிய உரைகள் சிலவற்றில் அருகிக் காண்பதனை நடுநிலை அறிஞர் ஒப்புவர். நமது பேராசிரியரோ ஒரோவழித் தமக்கெய்தும் ஐயத்தினை ஐயமாகவும், விளங்காமையை விளங்காமையாகவும் வைத்துரைக்கும் நடுநிலையழகு மிக, மிகப் போற்றற்குரியதாகும். ஒன்று வருமாறு:—

"அஃதேல், வினைச்சொற்கள் முற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும் என மூவகைப்படும். அவற்றுட் பெயரெச்சம் வினையெச்சம் என்பன இத்தன்மைய என்று எடுத்தோதி முற்றுச் சொல்லாவது இத்தன்மையதென்று ஓதிற்றிலர். அதற்கு இலக்கணம் யாங்குப்பெறுதும் எனின், எச்சவியலுட் பெறுதும். வினைக்கு இன்றியமையாத முற்றினை ஒழிபியல் கூறுகின்றுழிக் கூறியவதனாற் பெற்றதென்னையெனின், அஃது எமக்குப் புலனுயிற்றின்று"

"இவற்றுள், கூபகமும், கொல்லமுங் கடல் கொள்ளப்படுதலின் குமரியாற்றின் வடகரையைக் கொல்லமெனக் குடியேறினர் போலும்"

இங்ஙனம் உரையெழுதல் தொல்லுரையாசிரியர்களியல்பேயெனலை ஓர் எடுத்துக்காட்டாற்காட்டுதும். இளம்பூரணம்:-

"உவமைத் தொகை யென்று காட்டினவெல்லாம் வேற்றுமை யுருபுபற்றியன்றி வாரா: என்னை? துடிநடுவென்றவிடத்துத் துடியை யொக்கும் நடுவென இரண்டனுருபுபற்றி வருமாதலின்; உவமத்தொகை யென்றதென்னையெனின், அதற்கு ஒருசாரார் சொல்லுவது:— துடிநடுவென்புழி உவமையுருபு வேற்றுமையுருபு என இரண்டுந் தொக்கவேனும், துடிபோலும் நடுவெனத் தொகைக்கு உவமப்பொருளே சிறப்புடைத்தாகலின், அது தொகையென்பது; ஐகாரவுருபு அவ்வுவம வுருபினை நோக்கி வந்ததென்ப என்னை? துடியை நடுவாகக் கொள்ளாதாகலின் என்பது. இனியதற்கு மெய்யுரை வல்லார் வாய்க் கேட்டுணர்க."

இவ்வுரையாளர் சைவநன்னெறி நூல்களினும் சித்தர்கள் நூலினும் மிக்கபயிற்சியும், உறுதியும் உடையார்போலும். சில

எடுத்துக் காட்டுக்களில் இவ்வுண்மை புலனாகும். “மந்திரம் என்பது பிறரறியாமல் தம்முள்ளார் அறிய மறைத்துக்கூறுஞ்சொல் அதன்கண் ஆகுவன, உலகினுள் வழங்குகின்ற பொருட்குத் தாம் அறிகுறியிட்டு ஆண்டுவருங் குழுவின்வந்தகுறிநிலை வழக்கு. அது வெளிப்பட்ட சொல்லால் உணரும் பொருட்கு மறைத்துப் பெயரிடுதலும், எழுத்திற்குப் பிறபெயரிட்டு வழங்குதலும். என இருவகைப்படும். இவையும் பொருள் வேறுபடுத்தி வழங்குதலின் இசை யெச்சமாயின. அவற்றுள், பொருட்கு வேறு பெயரிட்டன:—வண்ணக்கர் காணத்தை நீலம் என்றலும், யானைப்பாகர் ஆடையைக் காரை என்றலும் முதலாயின. எழுத்திற்கு வேறுபெயரிட்டு வழங்குமாறு:—மண்ணைச் சுமந்த வன்றானும் வரத ராசன் மகன்றானும், எண்ணிய வரகாலிமூன்று மிரண்டு மரமும் ஓர்யாறும், திண்ணமறிய வல்லார்க்குச் சிவகதியைப் பெறலாமே. இதனுள் மண்ணைச்சுமந்தவன்-ந, வரதராசன்மகன்-ம, வரகாலி மூன்று-சி, இரண்டுமரம்-வா, ஓர்யாறு-ய எனக்கூற, நமசிவாய எனப் பொருளாயிற்று.” இது சித்தர் பாடல் போலும்.

இங்ஙனம் பல்வகைப்படும் இவ்வுரைச் சிறப்பினையும், இவர் தம் கால ஆராய்ச்சிக்குரிய குறிப்புக்களையும், ஓய்வு பெறுந் தோறும் எழுதிவரலாமென எண்ணியுளேம்.

இதழாசிரியர்.

## ஆண்டு விழா.

இச்சங்கத்துப் பதினான்காம் ஆண்டுவிழா, குரோதன புரட்டாசி, அ, கூ ஆம் நாட்கள் (24, 25–10–25) சனி ஞாயிறு களில், மகிபாலன்பட்டி ‘**பண்டிதமணி**’ **திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள்** தலைமையில் நிகழும். விரிவுரையியற்ற மனமுவந்திருக்கும் திருவாளர்கள் (இதுகாறும்) சென்னை, மணி திருநாவுக்கரசு முதலியாரவர்கள்; சலகண்டபுரம், அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள்; லால்குடி, அ. சரவணமுதலியாரவர்கள்; மதுரை ஆ. கார்மேகக்கோன் அவர்கள்.

உ

திருச்சிற்றம்பலம்.

# சீத்தலைச் சாத்தனார்.

## பெயர்.

தவளக் கோட்டுப் பவளமால் வரையைப்
புந்தியம் பாற்கடல் நிறுவுநூஉம்
செந்தமி ழமுதம் திரண்டெழற் பொருட்டே.

நமதருமைத் தாய்மொழியாகிய தமிழில் சங்க நூல் பயில்வார்க்கு முதற்கண் பயிலற்குரியதும், ஐம்பெருங் காப்பியங்களி லொன்றாகியதும், தமிழகத்து நிகழ்ந்த கதையே பொருளாகக் கொண்ட முதல்நூலாயதும், தன்முகமாகப் பல நல்லுணர்வையும், நல்லறங்களையும் உலகினர்க்கு வலியுறுத்துவதும், தற்கால நல்லறிஞர் பலரும் சீரிய புதிய கருத்துக்களெனக் கொண்டு காட்டும் அனைத்தும் தன்னகத்தே அங்கை நெல்லி யெனக் காட்டுவதும் ஆகிய மணிமேகலை யென்னும் நூலின் ஆக்கியோராவர் இச் சீத்தலைச் சாத்தனார்.

சாத்தன், கோற்றன் என்பன பழைய தமிழ்ப் பெயர்களே. இப் பெயர்களோடு பல ஊர்கள் நம் தமிழகத்தே சாத்தனூர், சாத்தங்குடி, சாத்தமங்கை, சாத்தப்பாடி, கொற்றனூர் முதலியனவாக இன்றும் வழங்கி வருகின்றன.

இனி, வடமொழியாளர் சிலர் அரியரபுத்திரராகிய மாசாத்தருக்குச் சாஸ்தா வென்னும் வடமொழிப்பெயருண்மையின் அதுவே தமிழிற் சாத்தனென்று வந்ததென வம்புரைப்பர்.

இவ்வுரை போலி யென வொருசொல்லிலொதுக்கித் தள்ளுவதினும், இவ்வம்பை விலைக்கு வாங்கியேனும் காரணங்காட்டி யொழித்து மேற்செல்வது நலமெனத் தோன்றுகிறது.

ஒலியொற்றுமை யுடையவாய்ப் பொருள் வேறுபட்ட சொற்கள் பல, பலமொழிகளிலும் வழங்குகின்றன. அதுபற்றி யொருமொழிக்குரிய சொல்லைப் பிறிதொருமொழி கடன்கொண்டதெனக் கூறுதல் பொருந்தாது. ஒருமொழிக்குரிய சொல் தன் பொருளோடு பிறிதொருமொழியில் வழங்கின் மட்டுமே அவ்வாறுகொள்வது பொருந்தும். அன்றேல், அக்கொள்கை யெள்ளி நகையாடற்பால தொன்றாம்.

சாத்தன் என்னுஞ்சொல் வடமொழியில், காரணங் கருதிய பொழுது ஆள்வோ (அரச) னுக்கும், காரணங் கருதாதபொழுது ஐயனருக்கும் ஆகி வரும் காரணவிடுகுறிப் பெயராகும். தமிழில், அச்சொல், உயர்திணைக்கும், அஃறிணைக்கும் பொதுவாகிய விரவுப்பெயராகும். சாத்தன் வந்தான், சாத்தன் ஒருவன் என்றவிடத்து உயர்திணைக்கும்; சாத்தன் வந்தது, சாத்தன் ஒன்று என்றவிடத்து அஃறிணைக்கும் வந்தது காண்க.

அவற்றுள், "பெயரெனப் படுபவை தெரியுங் காலை, உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும், ஆயிரு திணைக்கும் ஓரன்ன வுரிமையும், அம்மூ வுருபின தோன்ற லாறே" "இருதிணைச் சொற்கும் ஓரன்ன வுரிமையிற், றிரிபுவேறு படூஉம் எல்லாப் பெயரும், நினையுங் காலைத் தத்த மரபின், வினையோ டல்லது பாறெறி பிலவே" என்னும் பெயரியற் சூத்திர வுரைகளால் (சு, கஅ)இதனை யறிகிறோம்.

சாத்தன் என்னுஞ்சொல் தமிழ்ச்சொல்லா யிராவிடின், **ஆசிரியர் தோல்காப்பியனார்** அதற்குச் சூத்திரஞ்செய்து இலக்கணங்கூறாராகலானும், "காலம் உலகம்" என்னும் (தொல் சொல்-கிள) 'சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியர் உரைத்த உரையானும், தந்தையென்னும் முறைப்பெயரோடு புணர்ந்து சாத்**தந்தை** யென்று நிற்கும் இச்சொல்லின் பொருளான சாத்தந்

தை யென்பாரது மரபினர் *பழந்தமிழ்க் குடிகளாகி இன்றும் நம் தமிழகத்தே வாழ்ந்து வருகின்றமையானும் இது தமிழ்ச் சொல்லேயா மென்க.

இச்சொல்லை நுதலிய தொல்காப்பியச் சூத்திரங்கள் எழுத்ததிகாரத்து நான்கும், (தொகை-௧௩, புள்ளி-௫௨, ௫௪, ௫௫) சொல்லதிகாரத்து எட்டும் (௬, ௭, ௧௮, ௧௬, ௨௦, ௨௧, ௨௨, ௨௪) ஆகப் பன்னிரண்டு உள்ளன. இவற்றையெல்லாம் விட்டு, இஃதொரு வடசொல்லென ஒலியொப்புமையாற் கூறுவார் கூற்று, மணிவாசகப் பெருந்தகையார் **மீட்டிங்கு** வந்து வினைப்பிறவி சாராமே" என்றவிடத்து 'Meeting' என்ற ஆங்கிலச் சொல்லைத் தழுவினா ரெனல் போல்வ தொன்றும்.

இனி, இவர்பெயர் **சாத்தனாரே** (திருவன்) யாகவும், இப்பெயரையுடைய் வேறுபிறரினின்றும் பிரித்தற்பொருட்டு, இவரது உறுப்பின் சிறப்புப்பற்றிச் **சீத்தலைச் சாத்தனார்** (நற்) என்று வழங்கப்பட்டனர். தொழில்பற்றிக் **கூலவாணிகன் சாத்தனார்** (மணி) எனவும், ஊர்பற்றி **மதுரைச் சீத்தலைச் சாத்தனார்**, (குறு) எனவும், இவையனைத்தும்பற்றி **மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்** (அகம்) எனவும், இழுமென் மொழியால் விழுமியது பயக்குந் தமிழ்க்கவிகள் பாடும் தன்மையால் **தண்டமிழ்ச் சாத்தன்** எனவும், சிலபெரிய நூலாசிரியராய்ப் பல நல்லுரைகளை யுலகுக்கு மொழிந்ததுபற்றித் **தண்டமிழாசான் சாத்தன்** (சிலப்) எனவும் இவரைப் புலவர் அழைப்பாராயினர்.

இவருக்குச் சீத்தலைச் சாத்தனாரென இப்பெயர்வந்த தெதனால் என்பதைச் திருவள்ளுவ மாலையில் (௧௧) மருத்துவன் தாமோதரனார் கூறிய பாடலில் "தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு" என்னுந்தொடர் குறிப்பாகத் தெரிவிக்கிறது. இதற்குத் திருத்

---

* எமது கொங்குநாட்டின் வேளாண்மாந்தரின் குடிப்பெயர்களுள் சாத்தந்தை குடியு மொன்று. கோயமுத்தூர்ச் சில்லாவின் பெருஞ்செல்வர்களி லொருவராகிய ஊற்றுக்குழிச் சமீன்றார் இச் சாத்தந்தை குடியினரே.

தணிகைச் சரவணப்பெருமாளையர் உரைத்தவுரை நன்கு தெரிவிக்கின்றது. அது:—'முன் கேட்கப்பட்ட நூல்களி லெல்லாம் பல சொற்குற்றங்களும், பொருட்குற்றங்களும் கண்டு பொழுது தலையில் அறைந்துகொண்டு வந்தமையால் புண்பட்டுக் குத்தல் உண்டாயிருந்தது; இதன்கண் (திருக்குறள்) ஓர்குற்றமுங் காணப்பெறுமையால் நீங்கிற்றென்க' என்பதாம். மணிமேகலை அரும்பதவுரை முகப்பிலும் இக் கருத்துக் கூறப்பெற்றுளது.

இதனால் நாம் அறிவது:—இச் சாத்தனார், நிரம்பிய புலமையாளராய்த் தமிழ்க்கு வரம்பாகி விளங்கினார். உலகுக் குறுதி பயக்கும் அரும்பொருளடங்கிய இன்றமிழ்த்தொடை தேர்ந்து தொடுத்துச் சொல்வளமும், பொருள்வளமும் சிறந்த பாடல் பாடி அச் செந்தமிழின்பந் திளைத்து, ஆசானாகித் தண்டமிழாசான் சாத்தன் என நிலவியிருந்தார். இத்தகையார் முன்னிலையிற் புலவர் பலரும் தாம்தாம் இயற்றிய பாடல்களை நன்குமதிப்பின்பொருட்டுப் படித்துக் காட்டுவர். அதுகாலை அவற்றுள் வெச்சென்றசொல்லும், வெற்றென்றதொடையும் உடையவாய், நிரம்பா அறிவினர் பாடியபாடல் கேட்கப்படின் "ஐயோ! இப்பாடல், படிப்போர்க்கு இனிமையும் ஊற்றமும் தோற்றுவிக்க வலியில்லனவாயிருக்கின்றனவே. அதனோடும் அமையாது தீமையும், வெறுப்பும் தோற்றுவித்துத் தமிழின் பெயரையே கெடுக்க வன்றோ தோன்றின. செந்நெலுங் கதலியுங் கன்னலுங் கமுகும் பயன்தரும் ஓர்புலத்தே நச்சுப்புல் முளைத்தது போன்றதன்றே நம் தமிழகத்துக்கு இப்பாடல். ஓர் எளிய பறவையாகிய அசுணமு மன்றோ தன்செவிக்கு ஒவ்வாத ஒலியைக் கேட்டவிடத்து உயிர்விடுகிறது; அதனினுங் கீழாகவன்றோ நான் இவைகேட்டும் இவ்வுயிர்தாங்கி யிருந்தது" என்று வருந்தி, இவ்வருத்தம் உண்டாதற்கிருந்த காரணத்தின்பொருட்டுப் பிள்ளைப்பாண்டியன் முதலியோர்போல் ஒன்றும் செய்யாது, இவைகேட்கத்தலைவிதியிருந்தவாவென்று தம் தலையில் மோதிக்கொள்வர். சில பல வமயங்களில் இவ்வாறு மோதிக்கொண்டபொழுது, ஒருகால் தலையிற் புண்பட்டுச் சீப்பாய்ந்து இருந்தமையால் இத்தன்மையைப் பாராட்டி, அதுமுதல் இவருக்குச் சீத்தலைச் சாத்தனார் எனப்

புலவர் அழைப்பா ராயினர். இதுவே யிவர் பெயர்க்காரண மாகும்.

இவ்வாறன்றித் (சிக்கவி கேட்டபோது) தம் கையிலிருந்த எழுத்தாணியாற் றலையிற் குத்திக்கொண்டு எப்போதும் சீயொடிய தலையினரா யிருந்தாரெனக் கூறுவது பொருந்தாது. அது உலக மலைவுமாம்.

இப் பொருந்தாக் கூற்றினைக் கொண்டுதான்போலும், பின்னத்தூர் அ-நாராயணசாமி யய்யரவர்கள் நற்றிணை முகப்பில் இப்பெயர்க்கு வேறுபொருள்கண்டு, முன்னையோர் கருத்தை மறுப்பா ராயினர். அவர் கூறுவது:—

'**சீத்தலை-ஒரூர்**; அது, திருச்சிராப்பள்ளிச் சில்லாவில் பெருமளூர் (பெரும்பலூர்)த் தாலுகாவி லுள்ளது. அவரியற் பெயர்க்கு வூர்ப்பெயர் புணர்த்திச் சீத்தலைச் சாத்தனு ரெனப்பட்டது. திருவள்ளுவமாலையில் வரும் பாடலில் "தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு" என் றிருத்தலானே யதற்கேற்பச் சீத்தலை சீப்பிடித்த தலையென்று கதை கட்டிக் கூறுவாரு முளர். தலைக்குத்து ஒருகால் இருந்திருக்கினு மிருக்கலாம். அதுபற்றிச் சீப்பிடித்தல் ஒருதலையன்மையின், சீத்தலைக்குச் சீப்பிடித்த தலை யென்று பொருள் கூறுவது பொருத்தமாகத் தோன்ற வில்லை' என்பதாம்.

முன்னையா ரெல்லாம் சீத்தலை என்பது சினைபற்றிய பெயரெனக் கொண்டிருக்கப் பின்னையார் மட்டும் இடம்பற்றிய பெயரெனக் கொள்கிறார். இவற்று ளொன்றனைத் துணிய வேண்டியதும் நம் கடனாகின்றது.

இத் துணிபிற்குத் "தலைக்குத்து" என்னுந் தொடர் பற்றுக் கோடாக நிற்கின்றது. இத் தொடருக்கு-ஓர்நோய் (மண்டையிடிப்பு) என்றும், தலையிற் குத்திக்கொள்ளல் என்றும் பொருள் கொள்ளப்படும். இவ்வாறு பொருள் கொண்டவர் முறையே திருவள்ளுவமாலை யுரையாசிரியரும், மணிமேகலை யரும்பத வுரையாசிரியரு மாவர். இவற்றுள் நோய்-சீத்தலையின்

காரியமாகும், குத்திக்கொள்ளல்-சீத்தலையின் காரணமாகும். ஆகவே சீத்தலையென்பது சினைபற்றிய பெயரென்பது துணிபாம்.

ஆசிரியர் சேனாவரையர் விரவுப்பெயருக்கு உதாரணங் காட்ட வந்தவிடத்து (தொல், சொல், கஎச) இயற்பெயர்க்குச் **சாத்தன்** என்பதனையும், சினைமுதற்பெயருக்குச் **சீத்தலைச் சாத்தன்** என்பதனையும் காட்டினர். ஆசிரியர் நச்சினார்க்கினியரும் இவ்விடத்து இவ்வுதாரணமே காட்டினர். இவ்வாறு புலவர்பெயர் பிறவிடங்களிலும் உதாரணமாக இவர்களால் காட்டப்பட்டிருக்கின்றன.

இப்பெருமக்கள் கொள்கையினையே பின்பற்றினர், தற்கால ஆசிரியர்களாகிய மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயரவர்களும், சேது சமத்தானம், ரா. இராகவையங்காரவர்களும் ஆவர். இதனை முறையே மணிமேகலை முகப்பும், அகநானூற்று முகப்பும் காட்டும்.

பின்னை நாராயணனுர், இத்துணிபிற்குப் பற்றுக்கோடாகிய "தலைக்குத்தை" யுடன்பட்டுச், சீப்பிடித்தலை யுடன்படாமைதான் எதுபற்றி யெனின், முன் கூறியபடி, எழுத்தாணியாற் குத்திக்கொள்ளலும் எப்போழுதும் சீப்பிடித்த தலையோடிருந்தா ரெனலும், பொருந்தாத கூற்று என்பதுபற்றியே யாம். அதற்கு முன் கூறியவாறு சில பல வமயங்களிற் கையாற் றலையின் மோதிக்கொள்ள நேர்ந்த பொழுது, ஓர் கால் தலையிற் புண் உண்டாகிச் சீப்பிடித் திருந்தது. அதனைப் பாராட்டி அது முதற்கொண்டு இவருக்கு இப்பெயர்வந்தது எனப்பொருள் கொள்ளில், மலைவு ஒன்றும் நேராதாகையாற் பின்னை ஐயரவர்களும் முன்னைக் கருத்தை உடன்படுவர் என்பதில் ஐயமின்றாம்.

ஆகவே, இங்குச் சீத்தலையென்னுஞ் சொல் இடம்பற்றியதன்று; சினைபற்றியதே யென்பது துணிபாயிற்று.

இவற்றால், மணிமேகலை நூலாசிரியராகிய சீத்தலைச் சாத்தனார்க்கு அப்பெயர் சினைபற்றிவந்த தமிழ்ப்பெயரென்பது பெற்றாம்.

பண்டிதர், அ. கந்தசாமிப்பிள்ளை.

# நற்றாயும், செவிலித் தாயும்.

(க)

(நற்றாய்—பெற்றதாய். செவிலித்தாய்—வளர்க்குந்தாய். இங்கே நற்றாய்—நமது தாய் நாடு. செவிலித்தாய்—ஆங்கிலக் கல்லூரி.)

**நற்றாய்:-** அம்மா! வருக, வருக! நீங்கள் உலகமெங்குஞ் சென்று ஆங்காங்கு என்னைப் போலும் எளிய தாய்மார் பெற்ற பிள்ளைகளை அன்புடன் வளர்த்துத் தந்து பெரும் புகழ் பெறுகின்றவர்கள் என்பது கேட்டறிவேன். எனது இப்பிள்ளையையும் வளர்த்துத் தருவீர்களாயின் அந் நன்றியை என்றும் மறவேன்.

**செவிலி:-** அம்மா! அவ்வண்ணமே செய்வேன். இப்பிள்ளைக்கு ஐந்து, ஆறு வயதிருக்கும் போலும்.

**நற்:-** ஆம், ஐந்து ஆண்டும் நான்கு திங்களும் ஆயின.

**செ:-** நல்லது, இப்பிள்ளையின் இப்போதைய பழக்க வழக்கங்களை அருள்கூர்ந்து கூறுவீர்களா?

**நற்:-** அம்மா! இவன் ஓர் அருமைக்குழந்தை. 'சாமி' என்றால் தலை கொள்ளா மகிழ்ச்சி. தெருவில் சாமி வருகிறது என்றால் பாற்கஞ்சி குடித்துக்கொண்டிருப்பினும் வைத்துவிட்டு ஓடிவிடுவான். தெருவில் பிள்ளைகளெல்லாம் தங்களுக்கு மண் வீடுகள் கட்டி விளையாட, இவன் சாமிக்குக் கோயில் கட்டுவான். மற்றைப் பிள்ளைகள் பொம்மைகளைப் பெண்மாப்பிள்ளைகள் என்று வைத்து விளையாட, இவன் **அம்மை, அப்பன்** என்று வைத்து அவைகளுக்குப் பூசனை செய்வான். அம்மா! பெரியோர்களைக் கண்டால் அவர்களை வணங்குவதும், அவர்கள் ஏதேனும் கட்டளையிடின் அதனை விருப்போடும், பணிவோடும் செய்து முடிப்பதும் வியப்பாக விருக்கும். அம்மா! விடியற் காலையில்-எழுந்தது முதல் இரவு-ஐந்து நாழிகைக்குள் அவன் தூங்கும்வரை அவன் பழக்க வழக்கங்களை ஒரு நாளைக்காவது இங்கிருந்து நீங்கள் பார்ப்பீர்களாயின், மிக்க வியப்பு அடைவீர்கள். அம்மா! இவன் அறிவோ, கூர்மையான அறிவு. இளகிய மனம். சிறந்த குணம்..............

சே:- மிக்க மகிழ்ச்சி. இத்தகைய பிள்ளைகளை வளர்த்தாற்றான் பெருஞ்சிறப்பு அடையலாம். அம்மா! இப்பிள்ளையை இன்றே என்னிடம் ஒப்புவித்துவிடுங்கள். குறைந்தது பத்து ஆண்டுகளாவது என்னிடம் இருக்கவேண்டும். பின்னர்ப் பாருங்கள்; தங்கள் பிள்ளை ஒரு புத்துயிர் பெற்று வருவான்.

**நற்:-** நல்லதம்மா! இவன் இன்றே தங்கள் அடைக்கலம். இவனைப்பற்றிய எல்லாப் பொறுப்பினையும் தங்களிடம் விட்டுவிட்டேன். இனி என் பிள்ளையல்லன்; தங்கள் பிள்ளையே.

**சே:-** அதிற் றடையென்னை? என்பாற் பிள்ளையை விடும் அன்னையர் பின் தங்கள் பிள்ளைகளைப்பற்றிய கவலைகள் சிறிதும் அடைவதில்லை. பிள்ளைகளும் தங்கள் அன்னையரைச் சிறிதும் நாடுவதில்லை. அப்பா! கண்ணே! வருக! நாம் போய் வருவோம். அம்மணி! வணக்கம்.

(உ)

**நற்:-** அம்மா! வருக, வருக! நீண்ட காலமாயின. நீங்களும், என் அருமை மகனும் நலனுற்றிருப்பதை அவ்வப்போது தெரிந்து மகிழ்ந்தேன். உங்களை நேரிற் காணும் பேறு இன்றுதான் பெற்றேன். என் மகன் நலனுற்றிருக்கின்றனனு? உங்களுடன் வந்திருக்கும் இப்பையன் யாரோ?

**சே:-** அம்மா! இப்பையன் யாரென்பது தெரிந்திலதா? இவனே உங்கள் அருமைச் செல்வன். நான் மிகு முயற்சி கொண்டு உங்கள் பையனை உருவத்தால் மட்டன்றிக் குணங்களாலும் மிகவும் திருத்தியுள்ளேன். இவன் கல்லாத கலையில்லான். சுருங்கக் கூறின், இவன் உங்கள் பழைய பழக்க வழக்கங்களாய குடிலைவிட்டு மேனாட்டார் பழக்க வழக்கங்களாகிய புதிய மாளிகையில் குடிகொண்டுளான். நீங்கள் நாளடைவில் உணர்ந்து என்னை என்றும் மறவாது வாழ்த்துவீர்கள். நான் நாளை வருகின்றேன். வணக்கம்.

**நற்:-**அம்மா! அமர்க! எமது எளிய குடிலில் தங்கிப்போக வேண்டும். இவ்வெளிய காணிக்கையையும் பெற்றருளல்வேண்டும்

**சே:-**நல்லது, அங்ஙனமே செய்வேன்.

(௩)

**நற்:-** ஆ!..இது என்ன ஏமாற்றம்! என் அருமைப்பிள்ளையின் நிலை இவ்வாறாகுமா? யான் இப்பிள்ளைக்கு அணிந்திருந்த கடவுட்பற்று, தாய் நாட்டன்பு, தாய் மொழியன்பு முதலிய அணிகலன்களுள் ஒன்றும் காணேனே! என் அருமை மகனின் உடைமைப் பொருள்களாகிய அன்பு, அடக்கம், ஒழுக்கம் முதலியவற்றுள் ஒன்றும் காணேனே! இவன் உருவ மாறுபாட்டை என்னென்பேன்! இவன் பழக்க வழக்க மாறுபாட்டை என்னென்பேன்! இடையறாது வாய் கொள்ளாதுவரும் சுருட்டுப் புகையும், பிறவும் ஆகிய இச்செயல்களை இவன் எங்ஙனம் கற்றனனோ! படிப்புநிலைதான் திருந்தியிருக்கலாகாதா! ஐயோ! ஐந்து வயதிலேயே தங்கு தடையின்றிப் பேசக்கற்றிருந்த தாய் மொழியில் இப்போது பேசுதற்குத் தன்னால் இயலாது என்கின்றனனே! ஆங்கிலம் படித்த வாழ்வுதான் என்னே! ஒரு கலையும் உருப்படியாக உணர்ந்திலனே! அதிற்சிறிது, இதிற்சிறிதாக ஆண்டுதோறும் கற்பதும், அவ்வவ்வாண்டின் இறுதியிலேயே மறப்பதுமாகி வாளா வளர்ந்து வந்திருக்கின்றனனே! பாழும் தொண்டிற்கே கல்வி கற்றிருப்பதாக நாணின்றிக் கூறுகின்றனனே! அந்தோ! எங்கள் அருமைச் செவிலி, இவன் தந்தை பாட்டன் முதலியோரை வளர்த்த செவிலி, தாய்மொழிச் செவிலி—அவ்வன்னையிடம் விட்டிருந்தால் இப்பத்தாண்டினுள் பெரும் புலவனாகியிருப்பனே! தாய்மொழி, தாய் நாடுகளின் தொண்டுகளிற் றலைசிறந்து விளங்குவானே!........................

**பொன்**புரை கடவுட் பற்றும் பொற்பமர் கலனைக் காணேன்!
தன்பெரு நாட்டன் பாய தனிக்கல னதனைக் காணேன்!
மன்புகழ் மொழித்தா யன்பு, மற்றுயர் கலன்கள் காணேன்!
என்பெறும்? மயிருங் கொய்தே யிவ்வுருக் கண்டாள் அந்தோ!

**ப**ண்டுள அடக்கம், அன்பு, பண்பமர் ஒழுக்கம் யாவும்
விண்டன! வேர்கொண் டுற்ற மேவுதீப் பழக்க மெல்லாம்!
தொண்டது பிறர்க்குச் செய்பத் துளி, துளிக் கற்ற தன்றிக்
கண்டன கலைகள் யாவோ? காலம் வீண் போயிற் றந்தோ!

**அ**ருமையெம் மொழித்தாய் தன்பால் ஆண்டுக ளினைய தங்கின்
இருந்தன குணங்கள் ஓங்கும்! எழிற்குணம் றவுஞ் சேரும்
சுருங்கிய காலந் தன்னிற் சொற்கலை யாவும் தேரும்!
சிறந்திட மொழியும், நாடும் திருத்தொண்டு புரியு மன்றே!

**இதழாசிரியர்.**

உ

சிவமயம்

# திருக்குறளுரை யாராய்ச்சி.

கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடும்
நாவாயு மோடா நிலத்து. (சகூசு)

இ-ள்:- கால்வல் நெடுந்தேர் கடல் ஓடா—நிலத்தின்கண் ஓடுங் கால்வலிய நெடியதேர்கள் கடலின்கண் ஓடமாட்டா. கடல்ஓடும் நாவாயும் நிலத்து ஓடா—இனி, அக்கடலின்கண் ஓடும் நாவாய்கடாமும் நிலத்தின்கண் ஓடமாட்டா.

கடலோடா வென்ற மறுதலைப்படையான் நிலத்தோடும் என்பது வருவிக்கப்பட்டது. கால்வல் நெடுந்தேர் என்பது ஓடுதற்கேற்ற காலும் * பெருமையுமுடைய வாயினும் என்பது படநின்றது. மேற்சென்றார் பகைவரிடங்களை யறிந்து அவற்றிற்கேற்ற கருவிகளான் வினைசெய்க வென்பது தோன்ற நின்றமையின் இதுவும் மேலை யலங்கார மாயிற்று.

இவ்வருமைத் திருக்குறள் விரிவுரையின்கண் கடலோடா வென்பது மறுதலைப்படையெனப் பொறிக்கப்பெற்றுள்ளது. இக்கடலோடாவென்ற தொடர்மொழிக்கண் மறுதலைப்படையுண்டா? இன்றா? என ஆராய்வாம். பவணந்தியார் "பொருண் முதலாறும் அடைசேர் மொழி" எனக்கூறியிருத்தலின் பொருண் முதலியவாறனையுமுணர்த்துஞ் சொற்கள் அடையாக முன்வர அவற்றை யேற்றுப் பின்வருஞ்சொற்கள் அடைகொளியாமென் பதனைச் சிற்றிலக்கணங்கற்ற சிறுமகாரும் தெள்ளிதினுணர்வர். இனி, இவ்விலக்கணத்தால் அடை முன்னரும் அடைகொளி பின்னரும் நிற்றல் முறையெனப் புலனாகின்றது. இம்முறை இத்தொடர்மொழிக்கண் மாறுகோளுற்று நிற்றலை யொருசிறிது காட்டுவாம்.

* நெடுமையும் என்றிருப்பின் நன்று. இ. ர்.

காலவல் நெடுந்தேரென்பது எழுவாயாகவும், கடலோடா வென்பது பயனிலையாகவுநிற்றலின் கடலோடாவென்பது அடைமொழியின்றுதலை யாவரும் நன்கறிவர்.

யாம் இவ்வுயர்தனிச்செம்மொழி நூலைப் பயிலுங்காலத்து உண்மைப் பொருள்காணாது குன்றுமுட்டிய குரீப்போலவும், குறிச்சிபுக்கமான்போலவும், இடர்ப்பாடுற்றுப் பண்டைக்காலத் தேட்டுச்சுவடி யொன்றை யுடன்வைத்துப் பயின்று வந்தேம். அவ்வேட்டுச்சுவடியிற் கடலோடும் என்பது மறுதலையடையெனப் பொறிக்கப்பெற்றுள்ளது. ஆகலான், இப்பாடமே பொருட்சிறப்புற்று மிளிர்வதோடு புலத்துறைமுற்றிய நலத்தகையார் பலர்க்கும் நன்மகிழ்வினை யுளதாக்குமென வெண்ணுகின்றேம்.

௩௯௫, ௪௯௭, ௯௱௭, ௧௧௩௯ இவ்வருமைத்திருக்குறள்களின் விரிவுரைக்கண் ஆசிரியர் பரிமேலழகர் மறுதலைச்சொல், மறுதலைத்தொழில், மறுதலையெச்சம் வருவித்துரைத்திருத்தலை நுணுகி நோக்குவார்க்கு இதனுண்மை நன்கு புலனுமென்க.

கந்தசாமியார்.

# தமிழ்ப் பல்கலைக் கழகம்.

சில ஆண்டுகளாகத் தமிழர்கள் தமக்கெனத் தனிமையாக ஓர் பல்கலைக்கழகம் நிறுவப்படல் வேண்டுமென விரும்பிவந்தனர். நமது கல்வியமைச்சர் புதுப் பல்கலைக்கழகச் சட்டத்தைக் கொண்டுவந்தபின்னரும், ஆந்திரப் பல்கலைக்கழகம் நிறுவ ஏற்பாடுகள் செய்த பின்னரும் தமிழர்கள் தாம் விரும்பியதைப் பெறவேண்டிக் கிளர்ச்சிசெய்யத் தொடங்கினர். பட்டிகைகளிலும் இப்பொருளைப்பற்றித் தமிழர்கள் தமது எண்ணங்களை வெளியிட்டனர். பல்கலைக்கழகம் எம்முறையில் நடாத்தப்பட

வேண்டுமென முற்றும் ஆராய்ந்து துணிவதன் முன்னரே, எவ்வூரில் அக் கழகத்தை நிறுவுவ தென்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்யத் தலைப்பட்டனர். கடைசியாகத் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த சில பெரியார் அக்கழகத்தை எப்படியாவது தமது நகரிலேயே நிறுவிக்கொள்ள வேண்டுமென்ற பேரவா வுடையராய் இவ்வினையை விரைவில் முற்றுவித்தற்கெனத் தஞ்சைக் கரந்தையம்பதியில் நமது வளர்நெறியமைச்சர் திவான் பகதூர் **தி. நே. சிவஞானம் பிள்ளையவர்களின்** தலைமையின்கீழ், ஆவணி ௮ ஆம் நாள் ஓர் பெருங்கூட்டம் கூட்டினார்கள்.

அக் கூட்டத்திற்குச் சில சட்டசபை யுறுப்பினர்களும், பல தமிழ்ப் புலவர்களும், மற்றப் பெரியார்களும் வந்திருந்தார்கள். வந்திருந்தவர்களிற் பெரும்பாலார் சென்னைச் சட்டசபையைத் தமிழை வளர்க்காததற்காகக்குறைகூறித், தமக்கெனப் பல்கலைக் கழகம் நிறுவிக்கொள முயன்றுவரும் ஆந்திரர்களின் ஊக்கத்தை யெடுத்துக்காட்டிச், சட்டசபையிலுள்ள தமிழர்கள் உடனே ஓர் சட்டம் கொண்டுவந்து, ஓர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை விரைவில் நிறுவவேண்டுமென மிக ஆர்வத்தோடு பேசினார்கள். இராவ்பகதூர் T. A. இராமலிங்கச் செட்டியாரும், திரு. அலர்மேல்மங்கைத் தாயாரும் இப்பொழுதுள்ள சென்னைப் பல்கலைக் கழகத்தையே நம்முடைய விருப்பம்போல மாற்றிக்கொள்ள முயன்று, அவ்விருப்பம் கைகூடாவிட்டால் தனிமையாக ஒரு பல்கலைக் கழகத்துக்காக உழைப்பது நலமாயிருக்கும் என்னும் தமது எண்ணத்தைத் தெரிவித்தனர். முடியுமானால் நாளையே தமிழ்ப் பல்கலைக் கழகமொன்றை நிறுவிடவேண்டுமென்று எண்ணிவந்த பலரும் இவ் விருவர்களது எண்ணத்தைக் காதில் ஏற்றுக்கொள்ளவேயில்லை. ஆங்குக் கூடியிருந்தவர்களின் விருப்பத்தைக் கைத்தூக்காற் கணக்கிட்டபொழுது, திரு. செட்டியாரவர்களின் எண்ணத்தைச் சார்ந்தவர் மிகச்சிலராகவே காணப்பட்டனர்.

ஓர் தமிழ்ப் பல்கலைக்கழகம் தனிமையாக நமக்கு வேண்டுமா வென்ற கேள்வியைப் பல வகையாக ஆராய்ந்தா லன்றி

நேரான விடையிறுக்க இயலாது. முதன்முதல் நமக்கு எத்தகைய பல்கலைக் கழகம் தேவையென்பதை ஆராய்ந்த பிறகே எவ்வூரில் அது நிறுவப்படல் வேண்டுமென்பதைப் பற்றியும், அதற்காக வேண்டியிருக்கும் பொருளை எவ்வாறு சேர்க்கவேண்டு மென்பதைப் பற்றியும் ஆராய்வது பொருத்தமாகும். நமது வருங் கால நிலைமையை நோக்குமிடத்து இப்பொழுது நாம் கையாண்டு வரும் கல்விமுறைகள் அறவே மாற்றப்பட வேண்டுமென்பதை எவரும் ஒப்பவேண்டும். நாம் எதிர்பார்த்து ஏங்கியிருப்பது தன்னரசுக்காக. தன்னரசாலேதான் நாம் எவ்வித நன்மையை யும் பெற விருக்கின்றோம். ஆகவே நமது மக்களை விரைவில் தன்னரசுக்குத் தகுதி யுள்ளவர்க ளாக்கத் தாய்மொழிகளே தகுந்த வழிகளாகும்.

நமது நாடு ஓர் பெரிய கண்டம். நாம் தன்னரசால் முழு நலமும் எய்தவேண்டுமெனின், நம் நாட்டிலுள்ள இயல்மொழி களின்படி நம் நாட்டைப் பாகுபாடுசெய்து அப்பிரிவுகளுக்குத் தனித்தனிச் சட்டசபை முதலியவைகள் அமைத்து அரசியல் நடத்துவதே ஒழுங்காகவும் எளிதாகவும் இருக்கும். எனவே தமிழ் நாட்டில் அரசியல்மொழியாகத் தமிழே வழங்கப்படும். இவ்வாறு பிரிக்கப்பட்ட பல நாடுகளும் சிற்சில பொது அலுவல் களுக்காகக் கூடும்பொழுது ஓர் பொதுமொழி வேண்டியிருக்கும். அம்மொழி காந்தியடிகளின் எண்ணப்படி இந்தியாக இருக் கலாமா? அல்லது ஆங்கிலமாக இருக்கலாமா? என்ற கேள்வி நிகழும். இக்கேள்வியை யூன்றி யாராயுங்கால் இந்தியே நமது பொதுமொழியா யிருக்கலாமென்ற துணிபுக்கே வரநேரிடும். ஏனெனில், நம்மைப் போன்ற ஓர் சிறு பகுதியினர் இந்திமொழி யைக் கற்பது, நம் நாட்டார் யாவருமே ஆங்கிலமொழியைக் கற் பதைவிட விரும்பத்பாலது. மேலும் பிறமொழிகளைக் கற்பதில் மற்ற மக்களைவிடத் தமிழர் மிகத்திறமையுள்ளவர்கள். அவரவர் களின் தாய்மொழிகளே அவரவர் நாட்டில் அரசியல் மொழியாக இருத்தலான், இந்தியை நாம் குறைவாகக் கற்பதாலும், வட இந்தியர் அதிகமாகக் கற்றுவிடுவதாலும் நமக்கு ஒரு கெடுதியும்

நேரிடாது. எனவே நாம் ஆங்கில மொழிக்கு மூன்றாவது இடமே கொடுக்கவேண்டியிருக்கிறோம். மேல்நாட்டு அறிவுநூல்களைக் கற்கவும், ஆங்கில அரசாட்சியாருடன் சில வேலைகளிற் கலந்து பேசவும் எழுதவும் ஆங்கிலம் உதவியாயிருக்கும். தாய்மொழியை யாவரும் மறுவறத் தெரிந்துகொள்ள வேண்டுமேயொழிய ஆங்கிலத்தையும் இந்தியையும் ஒரு சிலரே கற்றுக் கொள்வது போதும்.

நம் நாட்டின் வருங்காலநிலையை நம்முன் வைத்துக்கொண்டு நமது கல்விச் சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டியிருத்தலால், தமிழ்மொழியை ஆங்கிலத்துக்கு ஒப்பாக ஓர் கட்டாய பாடமாக வைத்துவிட்டாற் போதுமென்று நினைப்பது தவறாகும். அது தான் நம் எண்ணமென்றால், திரு. இராமலிங்கச்செட்டியார் சொல்லியபடி சென்னைக் கழகத்தையே மிரட்டித் திருத்திக் கொள்ளலாம். நம் மக்களில் எழுத்துமணமேயின்றிப் பல்லாயிர மக்கள் வருந்தும்பொழுது உயர்தரக் கல்விக்காகப் பொதுப் பணத்தைச் செலவிடுவது அழகாகாது. சிதம்பரத்திலோ மதுரையிலோ சில செல்வர்கள் தமது சொந்தப் பொருளைக் கொண்டு பல்கலைக் கழகங்கள் நிறுவிக்கொள்வதாக இருந்தால் தடை செய்யாமல் அவர்களிடம் நாம் எப்பொழுதும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம். அப்பல்கலைக் கழகங்கள் எம்முறையில் நடத்தப்படினும் படுக. பல்கலைக் கழகங்கள் பெருகுவதில் நலமேயொழியக்கெடுதியில்லை. ஆனால், பணநெருக்கடியுள்ள இக்காலத்தில் பொதுப் பணத்தை யெடுத்துப் பழமுறையிற் பல்கலைக் கழகங்களை நிறுவுவது பெருந்தவறாகும்.

உண்மையான தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தமிழே கல்வி புகட்டுங் கருவியாக இருத்தல் வேண்டும். பிறநாடுகளில் அவரவர் மொழிகள் எவ்வாறு போற்றப்பட்டு முற்றும் பயனுள்ளவையாக ஆக்கப்பட்டுள்ளனவோ, அவ்வாறே தமிழும் தமிழகத்தில் ஒரு மொழியாக நிலவவேண்டும். எவ்வகை அறிவுநூல்களையும் விரைவில் தமிழ்மொழியில் பெயர்த்துக் கொள்ளலாம். எவ்வளவு வளப்பமில்லாத மொழியையுங்கூட நாம் மனம் வைத்

தால் சிறந்த மொழியாக விரைவில் வளர்த்துவிடலாம். அவ்வாறு செய்யாவிட்டால் நமக்கு வாழ்வில்லை; சிறப்பில்லை. மக்களாட்சி (Democracy) மிகுகின்ற இக்காலத்தில் பொதுமக்களுடன் நாம் பழகி அவர்களின் விருப்பங்களுக்கேற்ப நடந்துகொள்ள வேண்டியிருப்பது யாவரும் அறிந்தசெய்தி. சென்ற சில ஆண்டுகளாக எல்லாப் பொதுக்கூட்டங்களிலும் பெரும்பாலும் தமிழிலேயே எவரும் பேசத்தலைப்பட்டுவிட்டார்கள். "ஓட்டு" (வாக்கு)ப்பெற வேண்டுமென்றால் பெரியோர் பொதுமக்களை நெருங்கி அவர்கள் கேட்கும் வினாக்களுக்கு மறுமொழி புகன்று அவர்களை வயப்படுத்த வேண்டியிருக்கிறது. அடிமைப் பதவியை விட்டுநீங்காத இக்காலத்திலேயே தாய்மொழியின் தேவை இவ்வளவு அதிகமாகவிருக்குமாயின் நம்நாடு முழுஉரிமைகளையும் பெற்றுவிட்டால் பொது மக்களின் வலியும் தாய்மொழியின் தேவையும் கட்டாயம் அதிகப்படும். ஆகையால் நாம் உரிமைகளைப் பெறுதற்குத் தமிழே தேவை. நமது உரிமைகளைக் காப்பாற்றிக் கையாள்வதற்கும் தமிழ்தான் தேவை. தாய்மொழியான தமிழ்மொழியால்தான் நாம் உய்யவிருக்கின்றோம்.

இவ்வகையான ஓர் தனித்தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவுதற்கு அரசாட்சியாரின் உதவி அதிகமாகவேண்டியிருக்குமென்பதில் ஐயமில்லை. நமது பொதுமக்களோ ஆங்கிலத்திலே மயங்கி அறிவழிந்து கிடக்கின்றனர். அவர்களுக்கு இப்பொழுதுதான் நல்லறிவு பிறந்திருக்கிறது. தமது மக்களைப் பெரும்பொருள்செலவிட்டுப் பெரும் பெரும் பட்டங்களுக்குப் படிக்க வைத்தும் அவர்களுக்குத் தக்கபதவிகள் கிடைக்காமையால், மனம் நொந்து வருந்துகின்றனர். "எல்லோரும் படிக்கத்தொடங்கிவிட்டமையால் வந்ததுகேடு" என்று கூக்குரலிடுகின்றனர். "என்ன, பறையன் பள்ளனெல்லாம் படிக்கிறதென்றால் இப்படித்தான் வம்புவந்து சேரும்" என்று பொருமையுறுகின்றனர். ஆங்கிலம் படித்துத் தேர்ந்தவர்கள் நூற்றுக்கு ஐந்துபேர்கூட இல்லை. தாய்மொழி தெரிந்தவர்களோ நூற்றுக்குப் பத்துப்பேர்கள்தாம். இக்காலத்திலேயே இத்துணைத் துன்பம் நேரிடுவதெ

னின், நமது கல்விமுறையிற் பெரும்பிழை செய்துவந்துளோமென்பது போதரும். தமிழ்மொழியே தனிமொழியாக இயங்க வேண்டுமெனின், அரசாட்சியார் அதற்கேற்ப அடிப்படைக்கல் முதற்கொண்டு கல்விமுறையைக் கண்ணோட்டமில்லாது திருத்தல் வேண்டும். இப்பொழுது இருப்பதுபோல முதல்வகுப்பிலேயே ஆங்கில எழுத்துக்களைக் கற்பித்தல் அறவே ஒழிக்கப்படல் வேண்டும். பத்தாவதுவகுப்பில் ஆங்கிலந்தவிரமற்றப்பாடங்களைத் தாய்மொழியிலேயே படித்துத் தேர்வுகளில் விடையளிக்கலாமென்ற விதியொன்றிருக்கிறது. அவ்விதியிருப்பதும் இல்லாததும் ஒன்றே. தாய்மொழியிற்றான் விடையெழுதவேண்டுமென்று விதிக்கப்பட்டாலொழிய நம் மக்கள் தாய்மொழியில் ஒருகாலும் விடையளிக்கப்போவதில்லை. மேலேகூறியபடி தமிழே ஒருமொழியாகத் தமிழகத்தில் நிலவுங்காலம்வர எத்தனையாண்டுகள் செல்லுமோ? நாம் முயன்றால் விரைவிற் கைகூடாமற்போகாது. நமது வருங்காலவுயர்வு தாய்மொழி வளர்ச்சியின்வழி நிற்றலால் நாம் பெரும்பாடுபடவேண்டும். ஆங்கிலப்பேயின் ஆட்சியிலிருந்து விலகவேண்டும். ஆங்கிலர்களுக்கு இம்முறை பிடித்தமாகவே இராது. ஏனெனில் சீர்மையிலிருந்து இப்பொழுதுபோல ஆங்கில மக்களைக்கொண்டுவந்து உயர்ந்த வேலைகளில் அமர்த்த முடியாது. அவ்விடங்களிலெல்லாம் தாய்மொழியுணர்ந்த நம் நாட்டுமக்களே தங்கியிருந்து வேலைபார்த்து வருவர். ஈங்கு எடுத்துக்கூறப்பட்டவைகள் பலருக்கு விளையாட்டாகவும் கைகூடாதவைகளெனவும் தோன்றும். விரித்தாற் பெருகுமெனும் அச்சத்தாற் பலபொருள்கள் விடுக்கப்பட்டன. ஆகையால், தனித்தமிழ்ப் பல்கலைக்கழகந்தவிர வேறொன்றும் நமக்கு இப்பொழுது வேண்டுவதில்லையென்றுகூறி இக்கட்டுரையை முடிப்பதற்குமுன் ஸ்பானியா, போர்த்துகல், சுவிட்சர்லாந்து போன்ற சிறுசிறு ஐரோப்பிய நாடுகளும் தம்தம் மொழிகளாலேயே பெருவாழ்வு வாழ்ந்துவருவதெனப் படிப்போர்க்கு நினைவுறுத்துகின்றேன்.

சி. வேதாசலம், பி. எ., பி. எல்.,

# மாணவர் விடைகள்.

ஆசிரியர் வினா:— "இலக்கணமாவது யாது?
(வகுப்பு—பள்ளி இறுதி—S. S. L. C. கேள்வி எண்-(ந. அ.)

சோ........ம்:—எங்கள் சிறு காதுக்குள் நுழையாத செக்குலக்கை போல்வது.

பூ........ன்:—தூக்கம் விளைவிக்கும் அரிய மருந்து. பண்டிதர்களிடம் விலையின்றிக் கிடைப்பது.

அ........வு:—பெரிய மாணவர்களாகிய எங்கள் வயதை நோக்காமல் குழந்தைகள் என்று எண்ணிப் பண்டிதர்கள் புகட்டக்கொண்டுவரும் வேப்பெண்ணெய்.

ந......பி:—பிடாரியைப் பிடித்துத் தள்ளியும் பெண்ணுக்கு மாப்பிள்ளை என்று வருவார்போல், தேர்ச்சியாளரும் (பரீட்சகரும்), மாணவர்களாகிய நாங்களும் புறக்கணித்து ஒதுக்கியும் நாணமின்றி வந்துசூழ்வது

மீ.......ம்:—தேர்ச்சியில் (பரீட்சையில்) போனாலும் 100-க்கு 5 'மார்க்கு'. வந்தாலும் 100-க்கு 5 என்ற அவமதிப்புடையது. ஏதாவது எழுதினாலும் இரண்டரை 'மார்க்கு' வந்துவிடுவது.

க......ம்:—சடகோபாச்சாரியார் பாடியிருக்கும் நன்னூல்

அ.......லா:—எழுவா, பயனிலை யெல்லாம் சொல்லித் தருவது.

இ........ல்:—அன்மொழித்தொடர், ஆகுபெயர், வினையெச்சத்தொகை, பெயரெச்சத்தொகை என்று என்னென்ன இழவோ ஒரு கூடை இருப்பது.

பெ.......ரி:—அடிப்படையும் இன்றிச் செங்கல், சுண்ணாம்பும் இன்றிக் கட்டப்படும் மேல்மாடி. எவ்வாறெனில்-கீழ் வகுப்பில் நாங்கள் ஒன்றும் தெரிந்துகொள்ளாதது. இங்கேயும் ஆசிரியர்கள் . நூலின்றிச் சொல்லிக் கொடுக்க வேண்டியது.

த.... ...ள்:—பண்டிதர்கள் பக்கம் இருந்துகொண்டு உலகத்தையெல்லாம் வெருட்டும் ஒரு சிறு பூச்சாண்டி.

இதழாசிரியர்.

தமிழ்த்தாய் வாழ்க.

# நூலாராய்ச்சி.

இக்காலத்தில் கற்றவர்கள் அனைவரும் ஆராய்ச்சி முறையில் வெளிவரும் நூல்களையே பெரும்பாலும் விரும்புகின்றனர். உற்றுநோக்கின், ஆராய்ச்சிமுறையே இவ்வுலகிற்குப் பெரும் பயனைத் தருமென்பது விளங்கும். கற்றறிந்த பெரியார் தங்கள் கல்வியை உலகினர்க்கு உதவும் நெறி ஆராய்ச்சியேயாகும். ஆராய்ச்சியின்றிப் பழங்கலைகளை மனப்பாடஞ்செய்து கற்பது ஒற் பெரும்பயனின்றென்பதைத் தற்காலக் கல்வியறிஞர் உணர்ந்திருக்கின்றனர். இக்காலத்தில் ஆங்கிலமொழியிற்றான் ஆராய்ச்சி நூல்கள் மிகுதியாக வெளிவருகின்றன. "ஆராய்ச்சி முறையில் நம்மவரைச்செலுத்தியவர் மேல் நாட்டினர்" என்பது சிலர் எண்ணம். நம்தமிழ்மொழியில், ஆங்கிலமொழியில் இருப்பதுபோன்ற ஆராய்ச்சிநூல்கள் விரல்விட்டு எண்ணத்தக்க மிகச் சுருங்கிய எண்ணுள்ளனவாகவே இருக்கின்றன. அதற்குக் காரணம் தமிழ்ப்புலவர்களில் இரண்டொருவரைத்தவிர மிகப் பலர் ஆராய்ச்சிமுறையிற் புகாமலும், விருப்பமில்லாமலும் பழயபாடல்களைமட்டில் படித்துக்கொண்டிருப்பதே யாகும். தமிழ்த்தாயின் திருவருளால் பல்லாயிரம் ஆண்டுகளாக நின்று நிலவும் "திருக்குறள்." "தொல்காப்பியம்" போன்ற பல நூல்கள் நம்பாலிருக்கின்றன. இவைபோன்ற நூல்கள் ஆங்கில மொழியில் இருக்குமாயின் அவற்றைப்பற்றிய ஆராய்ச்சி நூல்கள் எத்துணையோ வெளிவந்துலவக் காண்பேமன்றோ? மேற்கண்ட அரும்பெரும்நூல்களைப் பெற்றிருந்தும்' தமிழர்களாகிய யாம் வாளா உறங்கிக்கிடக்கின்றோம். இரண்டொருவர் அவற்றைப்பற்றிய ஆராய்ச்சிநூல்கள் எழுதிவெளியிட்டிருப்பினும், அவை அவற்றின் பெருமைமுழுவதையும் வெளியிட்டனவாகுமோ? பல புலவர்கள் பலதமிழ்நூல்களைப் பலகழகங்களில் அருமையாக விரித்துரைக்கின்றார்கள். அவர்கள் தங்கள்

ஆராய்ச்சியான விரிவுரைகளை எழுதிவெளியிடுவார்களாயின், நாம் இந்நாளில் எத்துணையோ பல ஆராய்ச்சி நூல்களைக்கண்டு மகிழலாம். இனியேனும் நமது தமிழ்ப்புலவர்கள் இம்முறையைக் கைக்கொள்வார்களாயின், நமது தமிழ்மொழி மிகவிரைவில் முன்னேற்றமடையுமென்பதற்கு ஐயமில்லை. இனி, இவ்வாராய்ச்சிமுறையைச்சிலர் எவ்வாறு கையாண்டுவருகின்றார்களென்பதையும், எவ்வாறு கையாளவேண்டுவது நேர்மையுடைத்தென்பதையும் எனது அறிவிற்கு எட்டினமட்டிற் கூறிமுடிக்கின்றேன்.

சிலர், ஆராய்ச்சியென்பது பழயநூல்களில் குறைகாணப்படுமாயின் அவற்றையோ, அல்லது, புதிதாகப் போதரும் நூல்களில் உள்ள குறைகளையோ முயன்று கண்டு வெளியிடுவதே எனக் கருதியிருக்கின்றனர். அங்ஙனமே பிறநூல்களில் தமக்குக் குற்றமெனத் தோன்றியபொருள்களையும், தம் கொள்கைக்கு மாறுபட்ட கொள்கையுடையார் எழுதும் நூல்களில் அரிதிற் தேடிய குற்றங்களையும், "ஆராய்ச்சி" என்ற தலைப்பெயருடன் வெளியிட்டுத் தமக்குள் தாமே மகிழ்ச்சியடைகின்றனர். இத்தகையாரைக் கனியிருப்பக் காய்கவர்ந்த........வரென்று கூற யார்தான் ஒருப்படமாட்டார்?

மற்றுஞ்சிலர் ஆராய எடுத்துக்கொண்ட நூலின் ஆசிரியரைத் தெய்வமாகவும், அந்நூலைக் கடவுள்மொழியாகவும் எண்ணிக்கொண்டு தமது ஆராய்ச்சியைத் தொடங்குகின்றனர். அதனால், ஆராய எடுத்துக்கொண்ட அந்நூலில் யாதேனும் பிழை காணப்படினும், அந்நூலினிடத்தும், அந்நூலாசிரியர்பாலும் தாம்கொண்டிருக்கும் அன்புமேலீட்டால் அதனை மறைக்க முயலுகின்றனர். உண்மையாக நோக்கும்போது மேற்கூறிய செய்கைகள் ஆராய்ச்சிமுறைக்குச் சிறிதும் ஏற்றனவல்ல. அச்செய்கைகளையுடையார் ஆராய்ச்சித்துறையிற் புகுதற்கு அருகருமல்லர்.

இனிஆராச்சியாளர் கைக்கொள்ளவேண்டிய இன்றியமையாமுறை சிலவற்றைக் கூறுவாம். திருமாலிடத்தும், ஆழ்வார்

களிடத்தும் அளவுகடந்த அன்புடைய கற்றோரொருவர்க்கு "நாலாயிரப்பிரபந்தத்தை" ஆராய்ந்து உண்மைகளை வெளியிட வேண்டும் என்ற எண்ணம் உண்டாவது இயல்பே. சைவசமயத்திலும், நாயன்மார்களிடத்திலும், ஆழ்ந்த அன்புடைய புலவர்களுக்குத் தொண்டர்வரலாறு, தேவாரம், திருவாசகம் முதலிய நூல்களை யாராய்ந்து ஏனையோர்க்கும் அவற்றின் அருமையை அறிவிக்க வேண்டும் என்ற நினைப்பு நிகழ்வதும் இயல்பே. தமிழ்மொழியில் உண்மையன்புடைய புலவர்களுக்குத் "தொல்காப்பியம்" "திருக்குறள்" "பத்துப்பாட்டு" "எட்டுத்தொகை" முதலிய பண்டைச் செந்தமிழ்நூல்களைத் துருவி ஆங்குள்ள மணிக்குவியல்களை மக்களுக்கு உதவவேண்டும் என்ற எண்ணம் எழுவதும் இயல்பே. இத்தகையார்கள் ஒரு நூலை ஆராயத்தொடங்குங்கால், தாம் அணிந்துள்ள "மதப்பற்று" "மொழிப்பற்று" என்ற கண்ணாடிகளை எடுத்துவைத்துவிட்டு, "நடுநிலைமை" என்ற கண்ணாடியை அணிந்துகோடல் வேண்டும். "மதப்பற்று, மொழிப்பற்று" என்ற கண்ணாடிகளை யணிந்தபடியே ஆராய்வார்களாயின், நூலில் அமைந்த உண்மைப்பொருள்கள் பல விளங்காமற் போய்விடும். "நடு நிலைமை" என்றகண்ணாடியோ, செய்மையிலிருப்பதையும் அண்மையிற்கொணர்ந்து பெரிதாகக் காட்டும் "நீண்டநோக்கக்கண்ணாடி" யை ஒக்கும். ஆதலால் ஆராய்ச்சியாளர்க்கு 'நடுநிலைமை' என்ற கண்ணாடியே உண்மைகாணுதற்கு உற்ற கருவியாகும்.

அன்றியும், ஆராய எடுத்துக்கொண்ட நூலின் ஆசிரியர் உண்மையாகவே கடவுட் பிறப்பினராயினும், அவரை "அறிவிற் சிறந்த பெரியார்" என்ற மட்டில் உயர்வாக எண்ணி ஆராய்தலே நன்று. அங்ஙனம் ஆராய்ந்தாற்றான் ஒரு நூலில் உள்ள நன்மைகளையும், தீமைகள் இருக்குமாயின் அவற்றையும் தெற்றெனத் தெளிந்து வெளியிட இயலும். ஒரு நூலில் பிழையிராதென்றெண்ணுதல் நேரிதன்று.

"நூலுரை போதகா சிரியர் மூவரும்
முக்குண வசத்தால் முறைமறந் தறைவரே."

என்பதனால் மக்களாயுள்ள எத்தகைய பெரியோர்பாலும் குற்றங் காணப்படுதல் கூடும். ஒரு பெரிய நூலில் யாதேனுங் குற்றங் காணப்படின், அதனை எடுத்துவெளியிடுவதனால், அந்நூலிற்காவது, அந்நூலாசிரியர்க்காவது யாதோரிழுக்கும் உண்டாகாது. தொல்காப்பியம் திருக்குறள் ஆகிய நூல்களிலும் குற்றம் காணப்படினும், அதனை எடுத்துக் கூறுவதனால் அந்நூல்களுக்கேனும், அந்நூல்களின் ஆசிரியர்களுக்கேனும் பெருமை குறைவதுண்டோ? இதனால் நூல்களில் குற்றங் கூறவேண்டுமென்று நாம் மொழிவதாக எண்ணுதல் கூடாது. உள்ளனவற்றை உள்ளவாறே ஒளிக்காமல் உரைக்க வேண்டுமென்பதே எமது கொள்கை. ஆராய்ச்சியாளர்களும் இதனையே கூறுகின்றனர்.

பண்டைய நூலொன்றை ஆராய்கின்றபோது, அதிற் காணப்படும் வரலாற்று நிகழ்ச்சிகளால் அறியப்படும் ஒழுக்கங்களையும் தற்காலத்தில் நிகழும் ஒழுக்கங்களையும் இணைத்துப்பார்த்தல் இன்றியமையாததாகும். இக்காலத்திற்கும் அந்நூல் உண்டான காலத்திற்கும் உள்ள வேறுபாடுகளையும் ஒளிக்காமல் உரைக்க வேண்டும். இக்காலத்திற் காணப்படாத ஒழுக்கமேனும், இக்காலத்திற்கு மாறுபட்ட ஒழுக்கமேனும் அந்நூல் செய்தகாலத்தில் நிகழ்ந்திருக்குமாயின், அவற்றைக்கண்டுகூறி அதன்மேல் தமது உரிமை எண்ணத்தையும் உரைக்கவேண்டும். இவையன்றி இக்காலத்தில் இருக்கின்றவெல்லாம் அக்காலத்தில் இருந்தன என்றும், அக்காலத்தில் இருந்தனவெல்லாம் இக்காலத்தில் இருக்கின்றனவென்றும் பொருந்தாதனவற்றையும் பொருத்திக் காட்டி மகிழ்ச்சியடைதல் உண்மையாராய்ச்சியாகாது. இக்காலத்தில் உள்ள குறைகளையும், நன்மைகளையும், அக்காலத்தில் இருந்த குறைகளையும், நன்மைகளையும் உண்மையாக ஆராய்ந்து வெளியிடுவதே சிறந்த ஆராய்ச்சியாகும்; நடுநிலைக்கும் அழகாகும்.

ஆராய்ச்சி நெறியிற் புகுந்தவர்கள் தமக்கு ஐயமறத் தெரிந்த அரும்பொருள்களையே இயம்பவேண்டுமென்றித் தெரியாதனவற்றையும் தெரிந்தனவாக எண்ணிக்கொண்டு, வழ வழ கொழ

கொழ வெனக் கூறிச் செல்வதால் யாதொரு பயனுமின்று. தெரியாதனவற்றைத் தெரிந்தனவாக எண்ணிக்கொண்டு கூறிப் பிழைபட்டுப் பெருமை குறைதலைவிடத் தெரியாதனவற்றைத் தெரியாதனவாகக் கூறிவிடுதல் எத்துணையோ பெருமையுடைத்து.

நூலாராய்ச்சியைப்பற்றிச் சுருங்கக் கூறுமிடத்து, ஆராய எடுத்துக்கொண்ட நூலின் ஆசிரியர் தன்மை, அந்நூல் செய்த காலத்தில் உலகம் இருந்த நிலை, மக்கள் கொண்டிருந்த எண்ணங்கள், அக்காலத்திலிருந்த நல்லொழுக்கம், தீயொழுக்கம் முதலியவற்றைக்கண்டு உரைத்தல் வேண்டும். இவற்றையெல்லாம் காணத்தக்க இன்றியமையாக்கருவி "நடுநிலைக்கண்ணாடியே" என்பதைமீண்டும் நினைவூட்டுகின்றேம். இனியும் இவ்வாராய்ச்சியென்பதுபற்றி எழுதிச் செல்வேமாயின் அதுவும் ஒரு பெரிய ஆராய்ச்சியாகவே முடியும் ஆதலின், ஆராய்ந்தெழுதும் அரும்பொருள்களை எல்லோரும் உணர்ந்து கொள்ளத்தக்க எளியமொழியில் எழுதுதல் சாலவும் நன்று என்பதை மட்டில் கூறி முடிக்கின்றேம்.

இங்ஙனம்,

சா. சிதம்பரன்.

# திருப்புறம்பியத்துக் கல்வெட்டுக்கள்.

(முற்றொடர்ச்சி)

(௩)

காலம்:—முதல் இராஜராஜ சோழனது பத்தாம் ஆண்டு.

இடம்:— கர்ப்பக் கிரகத்தின் தென்புறம்.

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போலப்பெருநிலச் செல்வியும் தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர் சாலைக்கல மறுத்தருளி கங்கைபாடியும் நுளம்பப்பாடியும் தடிகைப்பாடியும் குடமலை நாடும் கொல்லமுங் கலிங்கமுந் திண்டிறல் வென்றித் தண் (2) டாற்கொண்ட தன்னெழில் வளரூழியில் யெல்லா

யாண்டுந் தொழுதகை விளங்கும் யாண்டே செழியனைத்தேசு கொள்கோ இராஜகேசரி வம்மற்கு யாண்டு பத்தாவது வடகரை அண்டாட்டுக்கூற்றத்து திருப்புறம்பியத் தாடியானுகிற (3) கூத்தபெருமாளுடைய நம்பிராட்டியார் திருப்பள்ளிக் கட்டிலு க்கு இவ்வூர் வளஞ்சியர் வைத்த திருநொந்தா விளக்கு இவைபற் றுக்கு பழையவாநவன்மா தேவி நிலம் வானவன்மாதேவி நதிக்கு கிழக்கு ராஜேந்திரிவாய்க்காலுக்குமேற்கு நின்று (4) சம்மதி த்து கையோலை செய்துகொடுத்தோம். தேவகன்மிகளெம் இவை கோயில் கணக்கு புறம்பியம் உடையான் பிரளயன் புறம்பியன் எழுத்து. இது மஹேசுரசாட்சி.

(சு)

காலம்:- முதல் இராஜராஜ சோழனது பத்தாம் ஆண்டு..

இடம்:-கர்ப்பக் கிரகத்தின் தென்புறம்

ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜகேசரிவம்மற்கு யாண்டு பத்தாவது அண்டாட்டுக் கூற்றத்து நீங்கிய தேவதானம் திருப்புறம்பியத்து பட்டாலகற்குப் பல்லவப் பேரரையன் வீரசிகாமணிப் பல்லவரை யன் சந்திராதித்தவல்லெரிக்க வைத்த நொந்தாவிளக்கு ஒன்று நிக்கு நிசதம் உழக்கு நெய்க்குவைத்த சாவா மூவாப் பேராடு கூய் தொண்ணூறும் பன்மாஹேஸ்வரரக்ஷை.

(ரு)

காலம்:- முதல் இராஜராஜ சோழனது எழாம் ஆண்டு

இடம்:- முன்னர் வரைந்துள்ள கல்வெட்டிற்குக் கீழ்.

ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜகேசரிவம்மற்கு யாண்டு எ ஆவது திருப்புறம்பிய பட்டாலகற்கு இருமுடிசோழ அணுக்கரில் ராச மாநாயகன் இத்தேவற்கு சந்திராதித்தவல் எரிக்க வைத்த திரு நொந்தா விளக்கு ஒன்றுனிக்கு நிசதம் உழக்கு நெய்யாக வை த்த ஆடு கூய் தொண்ணூறு.

சா

காலம்:-முதல் இராஜராஜ சோழனது ஐந்தாம் ஆண்டு

இடம்:-கர்ப்பக் கிரகத்தின் தென்புறம்

(1) ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜகேசரிவம்மற்கு யாண்டு ரு ஆவது வடகரை அண்டாட்டுக் கூற்றத்து நின்று நீங்கிய தேவதானத் திருப்புறம்பியம் வானவன் மூவேந்த வேளான் ஆராதித்த புறம்பிய முடைய (2) மஹாதேவர் பண்டாரத்து இராஜாவதிக்குயாண்டு உ ஆவது முதல் ரு ஆவது வரை செலவு நீக்கி உடலாயிந்த பொன்னில் இம்மஹாதேவர்க்கு சந்திராதித்தவல் சாத்தியருள பிட்டபட்ட மூன்றிறுற் பொன்னூற்றைம்பதிற் (3) கழஞ்சும் பொற்பூ+நிறை ஐங்கழஞ்சும் இதிற் சந்திராதித்தவற் சாத்தவும் தண்ணீரமுது செய்ய இட்ட வெள்ளிவட்டில்+நிறை நாற்பத்து முக்கழஞ்சேய் மூன்று மஞ்சாடியு மரை மாவுமாக இவை யித்தனையும் மாஹேஸ்வர ரக்ஷை.

(எ)

காலம் :—முதல் இராஜ ராஜ சோழனது. இருபத்தைந்தாம் ஆண்டு.

இடம் :—கர்ப்பக்கிரகத்தின் மேற்புறம்.

(1) ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிராஜகேசரிவம்மரான (2) ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு யாண்டு உடுரு (3) ஆவது இராஜேந்திர சிங்கவளநாட்டு அண் (4) டாட்டுக் கூற்றத்து நின்று நீங்கிய தேவதான (5) ந் திருப்புறம்பியத்து திருப்புறம்பியமுடைய மஹாதே (6) வர்க்கு இத்தேவர் தேவதானம் பிரம்பியன் காசு..................
இருக்கும் வெள் (7) ளாளன் பொருநபாடிபுடையான் அரணிதி மண்ணி யகமுடையான் (8) ஒழியாப்பகை பசுவதி வைத்த திருநொந்தா விளக்கு+ஒன்று இதில் முன்பு (9) இவன் பக்கல் காசு கொண்டு இவ்வூர் ஸ்ரீ கோயிலுடையான் மாறன்முன் (10) னூற்றுவபட்டன் எரிக்கக்கடவ விளக்கு அரையும் (11) இவன் மக்கள் பக்கல் காசுகொண்டு இவ்வூர் ஸ்ரீ கோயி (12) லுடையார்கள் எரிக்கக்கடவ விளக்கு அரையும் ஆக விளக்கு ஒன்று— பஞ்சு போசு...............

(அ)

காலம் :—முதல் இராஜராஜ சோழனது பதினேழாம் ஆண்டு.

இடம் :—கர்ப்பக்கிரகத்தின் தென்புறம்.

(1) ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள்போல பெருநிலச் செல்வியும் தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர் சாலை கலமறுத்தருளி கங்கை பாடியும் நுளம்பபாடியும் தடிகை வழியும் குடமலைநாடும் கொல்லமும் கலிங்கமும் திண்டிறல் வென்றி (2) செழியனைத்தேசுகொள் கோவிராஜராஜகேசரிவன்மற்கு யாண்டு மௌ ஆவது வடகரை அண்டாட்டுக் கூற்றத்து நின்று நீங்கிய தேவதாநங் திருப்புறம்பியமுடைய மஹாதேவற்கு மல்லி வைத்த நொந்தாவிளக்குக்கு கோயில் வெட்டிச்சு அரையும்படி யாப்பில் வெட்டிச்சு அ................ ........................(3) மாக விளக்கு+மன்ருடி சொற்படி .கண்ணன் எழுத்து இது.........

T. V. சதாசிவ பண்டாரத்தார்.

# மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபை.

புதுக்கோட்டை அரசினர் ஆட்சியுட்பட்ட மேலைச்சிவபுரி என்னும் இந்நகர்க்கண், இறைவன் திருவருளால் நடைபெற்று வரும் சன்மார்க்க சபையின் பதினெரும் ஆண்டு நிறைவுத் திருவிழா, குரோதனஹு ஆவணிமீ கக, க௨, கந-ஆம் தேதிகளில் சிதம்பரம் ஸ்ரீ மீனுட்சி தமிழ்க் கல்லூரித் தலைமையாசிரியர் (Principal) மஹாமஹோபாத்தியாய பிரமஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள் தலைமையில், பெருஞ் சிறப்போடு நடைபெற்றது.

அந் நாட்களில் இராமநாதபுரம் சேது சமஸ்தான வித்வான் ஸ்ரீ. ரா. இராகவையங்காரவர்கள், மகிபாலன்பட்டி வித்வான் ஸ்ரீ. மு. கதிரேசச்செட்டியாரவர்கள் முதலிய சிறந்த பல பண்டிதர்களின் அரிய உபந்நியாசங்கள் நடைபெற்றன.

அம் மாபெருங்கூட்டத்தில் சேது சமஸ்தான வித்வான் ஸ்ரீ ரா. இராகவையங்காரவர்களுக்கு "மஹா வித்வான்" என்னும் பட்டமும், மகிபாலன்பட்டி வித்வான் ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியாரவர்களுக்குப் "பண்டிதமணி" என்னும் பட்டமும் சன்மார்க்க சபையார் விரும்பிய வண்ணம் மஹாமஹோபாத்தியாய ஸ்ரீமாந் ஐயரவர்களால் பொன்னுடை புனைந்து மிக்க மகிழ்ச்சியோடு வழங்கப்பெற்றன.

இவ்விரு பெரும் புலவர்கட்கும் வழங்கப்பெற்ற இப்பட்டங்கள் மிகவும் தகுதியுடையன வென்று அங்குக்குழுமியிருந்த அறிவுடைப்பெரியார் பலர் பாராட்டிப் பேசினர்.

மேலைச் சிவபுரி
29—8—25

இங்ஙனம்,
வ. பழ சா. சாமிநாதன் செட்டியார்
தலைவர், சன்மார்க்க சபை.

உ

## நமது மகிழ்ச்சி.

மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபையார்-மேற்கூறியாங்கு-தமிழ் நாட்டுப் பெரும் புலவர் இருவர்க்குப் பட்டங்கள் வழங்கியது நமக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. அப்பட்டங்கள், தமிழ்ப் புலமையிலும், தமிழ்த்தாய்த் தொண்டிலும் முதன்மை பெற்று விளங்கும் நமது தமிழ்ப் பேராசிரியர் (மகா மகோபாத்தியாயர்) அவர்களால் வழங்கப் பெற்றமையின், மிக்க பொருத்தமுடையவும், சிறப்பினவுமாகும் தமிழை வளர்க்கும் தமிழ்ச் சங்கங்கள்-தமிழ்ப் பெரும் புலவர்களால்-வழங்கும் பட்டங்களே தமிழ்ப் புலமைக்குரிய உண்மைப் பட்டங்களாகும்.

திருவாளர் செட்டியாரவர்கள் நமது சங்கத்து அன்பு மிக்கவராய உறுப்பினர், விரிவுரையாளர்; இவர்களதுவடமொழி, தென்மொழிப் புலமையினையும், ஏனைப் பெருமையினையும் இவர்கள் பிறந்து வளர்ந்த நாட்டுக்கோட்டை வணிகரினும் நெடுஞ்

செய்மையராய ஏனைத் தமிழ்மக்கள்பலரும் நன்கறிவர். இவர்கள் நன்முயற்சியாற்றான், நாட்டுக்கோட்டை நகரங்கள் சிலவற்றில் தாய்மொழிக் கல்லூரிகள் சில நிறுவப்பெற்று நன்கு நிகழ்ந்து வருகின்றன. இவர்கள் தண்ணருளால் தமிழறிஞர்கள் அடையும் நலங்கள் அளவிடற்பாலனவல்ல. நமது செட்டியாரவர்கள் அடையும் சிறப்பெல்லாம் நமது சங்கத்திற்கும் ஆதலின், நாம் இவ்வுயர் சிறப்பினையேற்று, நமது நன்றியறிவை மேலைச் சிவபுரி சன்மார்க்க சபைக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இதழாசிரியர்.

---

உ

ஒரு புலவர் கூறிய

## தமிழ்ப் பொழில் வாழ்த்து.

**வாழ்க** நம் தமிழ்த்தாய்! வாழ்க நம் தனிமொழி!
ஓங்குக மேன்மேல்! ஓங்குக நாடொறும்!
ஊழியோர் கணமா வலப்பில்பல் லாண்டெலாம்
வாழியர் தமிழகம் மக்களொடு மகிழ்ந்தே!
புகழ்பொருள் வேட்காது கடமை பேணி
முன்னைநாள் நிலைமை நன்னராய்ந் திந்நாள்
அன்னையாந் தமிழணங் கரந்தை கூரப்
பிறமொழி கவர்ந்த புறமொழி நாணித்
தஞ்செயல் மீட்ப தாமெனத் துணிவுறீஇக்
கரந்தை யூன்றிய கழகந் தொடங்கின
நாண்முத லிதுகாறு நற்றமிழ்க் குழைத்த
தொண்டின் பயனாத் தோன்றித் தழைத்தது
**தமிழ்ப் பொழில்** அம்ம! தமிழர்காள் வம்மின்!
தாயடி நீழலிற் றங்கிவெப் பொழிமின்!
ஆண்டு தோறும் நீண்டுவளர் துணராற்
றிங்கட் கோரோர் செழுமலர் பூத்து
நறுமணம் வீசி நலிவுதீர்க் கும்மே!

தலைமிசைப் புனைமின்! விழியி லொற்றுமின்!
மார்புற அணைமின்! தோண்மிசைத் தாங்குமின்!
காட்சிக் கினியது, கைக்குமெல் லியது,
நாவிற்கினிய நறுந்தேன் சுரப்பது,
கேட்குஞ் செவிபிற கேளாது தகைவது,
உற்றுநோக் குளத்துக் குவகைமிக் கீவது,
இம்மை மறுமை யிரண்டுமீங் களிப்பது,
ஐந்தெழுத் தாலொரு மொழியோ வென்ற
வாய்க்கொரு பூட்டு மாட்டி வசிப்பது,
தமிழ்நூற் களவிலை யாயினுந் தனித்தமிழ்
இன்றெனப் புகன்றவ ரின்றிலை யென்றே
பரிவது, வடமொழி பலகலந் தன்றித்
தமிழ்நட வாதெனச் சாற்றுவோர் திகைத்துப்
பசபச விழிப்பக் குறுநகை புரிவது,
உயர்ந்ததெம் மொழியென வுரைத்தோர் நடுங்க
உயர்ந்ததெம் மொழியென ஒருவினப் போக்கி
உயர்ந்ததெம் மொழியும் மொழியுமென் றுரைப்பது,
எத்துணை யருநூல் எத்துணை யரும்பொருள்
எத்துணை யுயர்கலை எத்துணைப் பெருமறை
அஞ்சொ னுண் டேர்ச்சி யாளரெத் துணையோர்
எத்துணைப் பழைமை எத்துணை மொழிக்குத்
தாய்மை தூய்மைத் தகவிவை பூண்டே
என்றுங் கன்னியா யினிதுவீற் றிருக்குமெங்
கோமகட் கோவோர் குறைவுறக் காண்பதென்
நெஞ்சுநூம் மவரை எழுப்புங் குரலது,
காணுமின் மகிழ்ந்தே! பூணுமின் விழைந்தே!
காந்தை மலர்தலிற் கடவுண்முடிக் கேற்பது,
மீட்சிப் பின்னர் வெற்றியே விளைதலின்
வாகையே யாய்நமக் கோகைதர வருவது,
உமையாள் கேள்வனும் உயர்வட வேங்கடக்
குன்றக் கிழமைக் குமரனும் * புரந்தனர்
முன்ன மென்பதனைப் பின்னும் நாட்ட

* ஒரு சார் ஆசிரியர் கொள்கை.

அப்பெய ருடையரால் அளிக்கப் பெறுவது,
நந்தமிழ்ப் பொழிலிற் செந்தமிழ்ப் பொழிலிது
மலர்மலர் பருவம் வந்த காலையும்
பயன்கொளி ரெனின்நும் பான்மை பான்மையோ!
சின்னுளின்கனி தின்பீர் மகிழ்வீர்!
பொழில் விளையாட லும் புதுவதன் றன்பீர்!
பண்டைத் தமிழ்நூற் பயில்பெரு வழக்கே!
பொதியக் காலும் புகழ்மிகு தமிழும்
தவழும் பொழிலிற் றண்மலர் வேண்டுவர்
ஆடவர் மகளிர் யாவரும் அதனுன்
மேற்கொள மலர்ந்து மெல்கிதமைத் தேடி
அஞ்சல் வழியாய் அஞ்சலென் றெய்தும்
இம்மலர் நாளும் இசைபெறக் கொண்மின்!
ஒருபத் தைந்து நும் மூதிபம் இலைகொல்?
இருபத் தைந்தே ஈக்கும் வெள்ளி!
ஆயுட் கால மளவும் நல்லறம்
மெய்ப்புகழ் விளைமினென் றெடுத்துச்
செப்புகம் எம்மைத் தெரியு மோர்க்கே.

அ. வரத நஞ்சைய பிள்ளை.

உ

# நக்கீரர்.

(முற்றொடர்ச்சி.)

இர- என்னஇலக்கணம்! இன்னஞ் சில நாளையிலே நீயும் ஒரு புலவனாகப் போகலாமென்று பார்க்கிறாய்என்பது தெரிகிறது. அஃதிருக்கட்டும். அவ்வளவுபெரிய தொழில் நாமென்ன செய்யப்போகிறோம். ஆயிரம்பொன் உன்கூலியா!

மூ- சரிதான். ஆயிரம்பொன் கூலிவேண்டுமோ? என்னஆசை! பைத்தியக்காரா—என்னவோ - பெண்கள் கூந்தலுக்கு மணம் எப்படி ஏற்பட்டதென்பதைப் பற்றிப் பாட்டுச் சொல்லுகிறவர்களுக்கு இந்தஆயிரம்பொன்னும் பரிசாம். நம் அரசன் இந்த முடிச்சைச் சங்கமண்டபத்தில் கட்டித் தொங்கவிட்டு வரச்சொன்னாராம். இதைக்கொண்டு வரச் சொல்லிவிட்டு அதோ நம் பண்டாரத் தலைவர் முன்னாற் போகிறார்.

இர- இது யாருக்குத்தான்தெரியாது! பூவாலேதான் வாசனை.

பூ- இவ்வளவு எளிதாச் சொல்லிவிட்டாயே? பாட்டுப்பாட வேண்டாமா?

இ- அப்படியானால் எனக்கு ஒருபாட்டுத்தெரியும். அதைச் சொன்னால் ஆயிரம்பொன்னும் எனக்குத்தான்.

மூ- எங்கே அந்தப்பாட்டைச் சொல் பார்ப்போம்.

இ- பூவையர்கள் கூந்தலுக்குப் பூவாலே தான்மணமாம்!
நாவைப்ப டைத்தவர்கள் நாட்டுங்களே இல்லையென்றால்!
நன்னானே–நானா....

மங்கையர்கள் கூந்தலுக்கு மலராலே தான்மணமாம்
எங்கேயிதை யில்லையென்று எனக்கு முன்னே சொல்லுங்
தில்லாலே லேலா. [களே!

பூ– சி, சி, நிறுத்து, போதும் வரவர அதிகமா எட்டுகிறாயே. நம் அரசன்கருத்து அதுவா யிருக்காது.

இ– இருந்தாலும் பாட்டென்று சொன்னபோது என்மனது அந்த முடிச்சுக்குள்ளே போயிருந்தது. கருத்தென்று சொன்னவுடனே வெளியே ஓடிவந்துவிட்டது.

பூ– அப்படியானால் நான் ஒன்று சொல்லுகிறேன் கேள். உன்மனசை முடிச்சுக்குள்ளேயே வைத்து விடு.

இ– வைத்தால் ?

பூ– நான் அதுமேலே படுமுடிச்சாக ஒருமுடிச்சுப் போட்டுவிடுறேன். அப்புறம் அது வெளியே வரவே வராது.

இ– நல்லவேலை! அதிருக்கட்டும். இந்த ஆயிரம்பொன்னும் யாருக்குத்தாம் கிடைக்குமென்று நினைக்கிறாய்.

பூ– ஏன், நம் சங்கப்புலவர் நாற்பது பேருக்குமேலே இருக்கிறார்களே, அவர்களிலே யாருக்காவது ஒருவருக்குத் தாம் கிடைக்கும்.

இ– அவர்களிலே யாருக்குத்தாம் கிடைக்கலாம் ?

பூ– அவர்களிலே நாலைந்துபேர் பேர்கூட எனக்குத் தெரியாது. நக்கீரர் என்று ஒருவர் இருக்கிறார். அவர்தாம் எல்லாருக்கும் தலைவராம். அவர் மிகவும்திறமையுள்ளவரென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவருக்குத் தாம் ஒரு சமயம் கிடைக்குமோ, என்னவோ !

இ– அவருக்குக் கிடைக்கவே கூடாது. அவருக்குக் கிடைக்காமற்போனால் நம் அப்பன் ஆலால சுந்தரமூர்த்திக்குப் பத்துத் தேங்காய் உடைப்பேன்.

பூ– ஏனப்பன்! அவர்மேல் உனக்கு அவ்வளவு கோபம் ?

இ– எனக்கு என்ன தெரியும்? எல்லோருஞ் சொல்லத்தான் கேள்வி. அவர் நம் சங்கத்துப் புலவர் தவிர வேறுயார்

எப்படிப்பட்ட பாட்டுப்பாடிக்கொண்டு போனாலும் அதிலே ஒரு குற்றங்கண்டுபிடித்து அவரை வந்த வழியைப் பார்த்துக்கொண்டு போகச்சொல்லி விடுகிறாராம். இதென்ன கொடுமை! அவருக்குக் கிடைக்கவே கூடாது. அவரைத் தவிர்த்து வேறுயாருக்குக் கிடைக்கலாஞ் சொல்லு.

பூ- கபிலர், பரணர் என்று இரண்டுபேர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வயதாய்விட்டபடியால் இப்பொழுது பாடுகிறதே யில்லையாம்.

இ- அதெல்லா மிருக்கட்டும். எனக்கு இப்பொழுதொன்று தோன்றுகிறது. அதைக்கேள். இத்தனைபேரையும்தாண்டி விட்டு வேறியாராவது இந்த ஆயிரம் பொன்னையும் தட்டிக் கொண்டு போய்விடக் கூடாதா? எனக்கு இப்பொழுது வந்த ஆசையைப்போல இன்னம் எத்தனையோ பேருக்கு வரலாம். பணமென்றால் பிணமும் வாய்திறக்குமென்கிறார் களே.

பூ- அப்போது நம் புலவர்கள் சும்மாயிருப்பார்களென்று நினைக்கிறாயா? இருக்கட்டும், இந்தப் பேச்செல்லாம் நமக்கு எதற்கு? நம் தொழிலை நாம் போய்ப் பார்த்து விட்டு வருவோம். நம் தலைவர் அதிகமாகக்கோபித்து கொள்ளுவார். விரைவிலே போவோம் வா.

இ- எல்லோரும் ஒருகை பார்ப்பார்கள். இன்னஞ் சில நாளையிலே எல்லாம் விளங்கிவிடும். நாம் போவோம்.

---

## களம்-நான்கு; மதிவாணனர் இல்லம்.

காலம்:- மாலை. நடிகர்:- மதிவாணன், மணிவண்ணன்.
(களத்தில் இருவரும் அமர்ந்திருத்தல்)

மணி:- அன்புருவாய நண்ப! இரண்டு நாள் முன்னர் நாம் பூங்காவிற்குச் சென்றபோழ்து யாரோ ஒருவர் குறுக்

கிட்டு நமது புலவர் பெருந்தகையாராகிய நக்கீரனாரைப் பற்றித் தமது மனம் போனபடியெல்லாம் கூறிச்சென்றா ரன்றோ?

மதி:- ஆம். அவர் நக்கீரனாரைப்பற்றிச் சொன்னதுண்டு. ஆனால், அவர் மனம்போனபடி யெல்லாம் சொன்னா ரென்பதை யான் ஒப்புக்கொள்ளமாட்டேன். அவர் கூற்றிலும் சிறிது உண்மை யுண்டு.

மணி:- என்ன, நீயும் இப்படிச் சொல்ல வந்துவிட்டனை?

மதி:- எங்கே! நமதுபுலவர் குணத்தில் மேலானவர் என்பதை உன்னால் வலியுறுத்திக் காட்ட முடியுமா?

மணி:- கூறுகிறேன் கேள். புலவர் பெருந்தகையாராகிய நக்கீரனார் குடிப்பிறப்பாகிய உடையுடுத்தவர்; கல்வியாகிய மலர் சூடியவர்; ஒழுக்கமென்னும் விழுக்கலன் பூண்டு, வாய்மை யென்னும் உணவுண்டு, நடுநிலை யென்னும் நகரின்கண் தூய்மை யென்னும் இருக்கையமர்ந்தவர்; கல்வித்திறமையில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையாக விளங்குகின்றவர்; அகத்தினும் புறத்தினும் பல திணையும் நலமுறப்பாடும் திறனுடையவர்; ஒவ்வொரு பொருளையும் நேரிற்கண்டாங்கு எடுத்துச் சொல்லும் அரியஆற்றலுடையார்; அன்றியும், யாருடனும் எத்துணையும் சலிப்பின்றி வாதியற்றி வெற்றிகொள்ளும் பெருமையுடையவர்; தாம் பொய்யென வுணர்ந்த வொன்றைத் தமக்குவரும் பெருமையைக் குறித்தாவது வேறெவ்வகைப் பொருட்டாலாவது மெய்யெனக் கூறார்; அவ்வாறே தாம் மெய்யெனக் கண்டதை எதன் பொருட்டும் நெகிழவிடார்; வீண் வாதியற்றும் அறிவிலிகளைத் தண்டிக்காமலும் விடார்.

மதி:- அன்ப! சற்றுநில், நானொன்று கூறவேண்டும்.

(தொடரும்.) பு. கோ.